விலை : 20.00 website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 03 புதன்கிழமை (19.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212


# தேசிய அரசு இருந்தால்தான் அரசியலமைப்பை நிறைவேற்றலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் கவலை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தங்களுக்கு இடையிலான போட்டிகளை கைவிட்டு அரசியலமைப்பை நிறைவேற்றும் வரையாவது இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்பட்டால்தான் புதிய அரசியலமைப்பு 04

## ஊடகவியலாளரிடம் சிஐடி விசாரணை

(யாழ்ப்பாணம்)

சுயாதீன ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனிடம், குற்றப்புலனாய்வு துறையினர் நேற்று இரண்டு மணிநேர விசாரணையை மேற்கொண்டனர். 04

## விரக்தி எம்.பிகளை சந்திக்கிறார் மங்கள

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களில் விரக்தியடைந்துள்ள உறுப்பினர்களை நிதி மற்றும் ஊடக அமைச்சர் 04

## டைனமைட் வெடித்து 8 மாணவர் மயக்கம்

(குருமன்காடு)

முல்லைத்தீவு, கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 23

## 167 மில். டொலர் கடன் உதவி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்குவதாக ஒப்புக்கொண்டிருந்த கடன் உதவியின் அடுத்த கட்ட கடனுதவியாக 167.2 மில்லியன் அமெ 23

## விக்னேஸ்வரனும் சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் வட மாகாண 23

## ஜனாதிபதிக்கு சிங்கப்பூர் பாராட்டு

(கொழும்பு)

நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை என சிங்கப்பூர் 04

## தாயார் முன்னிலையில் தாக்கப்பட்ட சுமந்திரன் கொலை முயற்சிக் கைதி

(யாழ்ப்பாணம்)

சுமந்திரன் கொலை முயற்சி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள கைதி ஒருவர் தனது தாயார் முன்னிலையில் நேற்றைய தினம் சிறைக்காவலாளியால் யாழ். சிறைச்சாலையில் தாக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியை சேர்ந்த முருகையா தவவேந்தன் (வயது 33) என்ற நபரே மேற்படி தாக்கப்பட்டுள்ளதாக அவரது தாயாரால் குறித்த விடயம் தொடர்பில் நேற்றைய தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை கொலைசெய்ய திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவித்து சந்தேகத்தின் பேரில் 5 முன்னாள் போராளிகள் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீது சிறையில் உள்ள 23

## தேர்தலை பிற்போட சட்டமூலம்

(கொழும்பு)

பதவிக்காலம் நிறைவடையவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது காலம் தாழ்த்துவதனை 04

## சம்பந்தனுடன் சந்திப்பு



23

## வித்தியா எவ்வாறு மீட்கப்பட்டார்? பொலிஸ் பரிசோதகர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய தீர்ப்பாயத்தின் (ரயல் அட்பார்) முன்னிலையில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் விசாரணை நேற்றுக் 23

## வட மத்தியிலும் பிரச்சினை!

(கொழும்பு)

வட மத்திய மாகாண சபைத் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு நேற்றைய மாகாண சபை அமர்வில் கைகலப்பு 23

## ரெலோவின் தெரிவு விந்தன்; முதலமைச்சருக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையில் தமிழீழ விடுதலை இயக்க(ரெலோ)த்திற்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சினை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்திற்கு வழங்குவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பினை தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகம் சட்டத்தரணி என்.சிறிகாந்தா கடிதம் மூலம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை தெரியப்படுத்தியு 24



## அதிகரிக்கும் சிறுவர் மீதான துஷ்பிரயோகம்

(கொழும்பு)

இந்த ஆண்டில் இதுவரையிலான 7 மாத காலத்தில் 3 ஆயிரத்து 785 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு 24

## சம்பந்தன் - விக்னேஸ்வரன் ஞாயிறு அன்று சந்திப்பு

(கொழும்பு)

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக தகவல்கள் 23

## மருத்துவர்களின் புதிய சங்கம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

தரப்படுத்தப்பட்ட வைத்தியர்கள் சங்கம் எனும் புதிய அமைப்பொன்று அரச வைத்திய அதிகாரிகள் 23

## புகையிலை தொடர்பில் நாளை முதல் தடை

(கொழும்பு)

புகையில்லாத புகையிலை உற்பத்தி செய்யப்படுவதற்கு இன்று தொடக்கம் தடைவிதிக்கப்படுவதாக தேசிய புகையிலை மற்றும் போதைப் பொருள் தொடர்பான அதிகார சபை அறிவித்துள்ளது.

இவ்வாறான புகையிலையை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை 23

## சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது, யாழ். நூலகத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் நூலக ஊழியர்களுக்கு பயிற்சி வசதிகளை வழங்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ்ப்பாண வைத்தியசாலையின் எலும்பு 23

## கேப்பாப்பிலவு 189 ஏக்கர் இன்று விடுவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் பாதுகாப்புப் படையினரிடமுள்ள 189 ஏக்கர் காணி இன்று விடுவிக்கப்படவுள்ளது.

இந்த காணி விடுவிப்பிற்காக 5 மில்லியன் ரூபாயை இராணுவத்திற்கு வழங்க மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள 04


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு தடுக்கப்பட்டுள்ளது

உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதன் அடிப்படையில் வடமராட்சி குடத்தனைப் பகுதியில் வகைதொகையின்றி சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த மணல் அகழ்வு தடுக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.அரச அதிபர் ஊடாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனூடாக சட்ட ஒழுங்கு, மறுசீரமைப்பு அமைச்சர் சாகல ரட்நாயக்கவின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து குடத்தனைப் பகுதிக்கு நேற்றுக் காலை விரைந்த பொலிஸார் அனுமதிப்பத்திரத்துடன் குடத்தனைப் பகுதியில் மணல் அகழப்படும் இடத்துக்கு சென்று அனுமதிப்பத்திரத்தினைப் பரிசீலித்தனர்.

அத்துடன் நேற்றில் இருந்து சட்டவிரோத மணல் அகழ்வு குறைக்கப்பட்டுள்ளது. (மு-60)


WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(ஜ-7705)


# மகிந்த செய்ய வேண்டியது மைத்திரிக்கு ஆதரவளிப்பதே

## – அமைச்சர் சமரசிங்க

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இரண்டு தலைவர்கள் தேவையில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த, இந்நாள் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவளிப்பது மட்டுமே என துறைமுகம் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் வாக்காளர்கள் இருந்தார்கள். ஆனால் தேர்தல் வெற்றியில் மக்கள் மைத்திரியுடன் இருந்துள்ளார்கள்.

அதேபோல் எதிர்காலத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மைத்திரியுடனேயே இருப்பார்கள் என அமைச்சர் கூறினார். (மு)


விற்பனைக்கு

90 நாட்கள் நிரம்பிய பூச்சி மருந்து, தடுப்பூசி போடப்பட்ட ஆண், பெண் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (9845)

T.P - 076 843 8641



ஏலவிற்பனை

யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 2017.07.31 மு.ப 10 மணியளவில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் பின்னரான பாவனைக்கு உதவாத பொருட்களின் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

(C-9109 அதிபர்


## வவுனியாவை வாட்டும் வரட்சி

வவுனியா மாவட்டத்தில் கடுமையான வரட்சி நீடிக்கிறது. இதன்காரணமாக எவ்வித விவசாயமோ, கமமோ செய்ய முடியாத நிலையாகவுள்ளது. பல கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது என வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.பி.ஆர். புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

மேலும் வவுனியா, அவரன் துலாவ, எலம்பகஸ்வெல, பாலையூர், செட்டிக்குளம்போன்ற குடிநீர் கிணறுகள் வற்றிவிட்டன.

அதேபோல வவுனியா மாவட்ட இராணுவ முகாம்களையும் குடி தண்ணீர் தட்டுப்பாடு வாட்டுவதாகஅறியமுடிகின்றது.


கண்ணீர் அஞ்சலி

திருமதி மகேஸ்வரி நாகப்பர்



வடமராட்சி நல்லொழுக்க நிறுவன (VOGT) வளவாளர் திரு.நா.சோதிநாதன் மற்றும் நிர்வாக உறுப்பினர் திரு.நா.கண்ணதாசன் அவர்களது பாசமிகு தாயார் திருமதி மகேஸ்வரி நாகப்பர் அவர்கள் 15.07.2017 அன்று காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

வடமராட்சி நல்லொழுக்க நிறுவன (VOGT) நிர்வாக உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கத்தவர்கள், அல்வாய்.

(C - 9103)



பாராட்டி வாழ்த்துகின்றோம்






திரு.ச.சிவகுமார் திருமதி சி.குணாநிதி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கொழும்பு BMICHஇல் நடைபெறுகின்றது. அந்நிகழ்வில் 19.07.2017 இன்று பட்டப்பின் கல்வி டிப்ளோமா - PGDE பட்டம் பெறும் திரு.ச.சிவகுமார், திருமதி சி.குணாநிதி இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு கண்ணகையம்மனின் ஆசிகளால் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வுற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கல்விச் சமூகம்,
(C-9102) கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம், தட்டுவன்கொட்டி.





யாழ்ப்பாணம்- கோட்டை

ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தின் இரதோற்சவம்-2017

முன்னவனே கோட்டை முனியப்பா
யாழ். நகரில் மன்னும் பரனே
மகாதேவா பொன்னும் பதமும்
கலையாவும் பாலிப்பாய் என்றன்
இதயம் தனிலே இருந்து

25ஆம் நாள் திருவிழா இன்று (19.07.2017) புதன்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். மாலை 4 மணிக்கு இரத உற்சவம்

26ஆம் நாள் திருவிழா 20.07.2017 வியாழக்கிழமை காலை தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். 27ஆம் நாள் திருவிழா 21.07.2017 வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தி.

இரதோற்சவத்தை சிறப்புற வாழ்த்துவோர்:

கிருபா லேணர்ஸ், ம.லோகராஜன் குடும்பம்

Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved A Grade Driving Training School

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 4353, 021 492 3200, 077 722 5292

(சி-9106, சி-9107)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து இலங்கையிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசியூடாக அச்சுறுத்தல்

### அங்கொட லொக்கா மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடுவல சமயங்க உட்பட 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான அங்கொட லொக்கா முல்லேரியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள லசந்த ஷந்தன பெரேரா என்ற அங்கொட லொக்கா, தொலைபேசியூடாகவே முல்லேரியா பொலிஸ் அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தனது உதவியாளர் வர்த்தகர்களிடம் கப்பம் பெறும் போது இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என அங்கொட லொக்கா தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அங்கொட லொக்கா உள்ளிட்ட இருவர் கடந்த மே மாதம் சென்னை நகரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட நிலையில், சென்னையில் இருந்து சட்டவிரோதமாக டுபாய் நாட்டுக்கு செல்ல முற்பட்ட வேளை அந்தநாட்டு குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகள் போன்று இந்திய சிறைச்சாலைகளிலும் தொலைபேசிகளில் பேசக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும் அங்கொட லொக்கா இலங்கையில் உள்ள தனது நண்பர்களுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து பிணையில் விடுதலையாகி தான் தப்பிச் சென்றுள்ளதாக கூறியதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### செங்கோலுடன் வெளியேறினார்

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையின் அவைத்தலைவர் செங்கோலுடன் வெளியேறியதால் சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

அவைத்தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண சபையின் அவைத்தலைவர் டி.எம். ஆர். சிறிபாலாவுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நேற்றுக் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 11 தமிழர்கள் விவகாரம்

# கடத்தல்கள் தொடர்பில் வீரவன்சவிடம் விரைவில் விசாரணை நடத்தப்படும்



(கொழும்பு)

**கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவிடம் விரைவில் விசாரணை செய்வது குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கவனம் செலுத்தியுள்ளனர்.**

கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ள 11 பேரும் விடுதலைப் புலிகள் என விமல் வீரவன்ச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலேயே அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் நாட்டின் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் முப்படையினர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அப்பாவிகள் என அறிக்கை கொடுத்துள்ள நிலையில் விமல் வீரவன்ச எந்த அடிப்படையில் இவ்வாறான தகவல்களை வெளியிட்டார் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளவே இந்த விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தேவையான சட்ட ஆலோசனைகளை தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவு பெற்று வரும் நிலையில் மிக விரைவில் அந்த விசாரணைகள் நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இந்த கடத்தல் விவகாரம் தொடர்பில் கடந்தவாரம் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க அது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த விமல் வீரவன்ச, திருமலையில் இருந்து மீன் லொறியில் மறைத்து கொழும்புக்கு குண்டு கடத்திய விவகாரம் தொடர்பில் 11 புலிகள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் காணாமற்போனமை தொடர்பிலேயே கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே விமல் வீரவன்சவிடம் அது தொடர்பில் விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. இந்த விவகாரம் தொடர்பில் இதுவரை குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளில் கப்பம் பெறும் நோக்குடன் இக்கடத்தல்கள் இடம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (இ-7)

## மைத்திரிக்கு மகிந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-சமரசிங்க




(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு இரண்டு தலைவர்கள் தேவையில்லை என குறிப்பிட்டுள்ள அவர் மகிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைவர் மைத்திரிக்கு ஆதரவளிப்பதனையே செய்ய வேண்டுமென வலியுறுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மக்கள் சிலர் அணிதிரண்டுள்ள போதிலும் அது தேர்தலில் வெற்றியீட்ட போதுமானதாக அமையவில்லை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனேயே இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மதஸ்தானங்களுக்கு 14 வீதம் வருமான வரி; உத்தேச வரி திருத்த சட்டமூலத்தில் யோசனை

அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ள உத்தேச வரி திருத்தச்சட்டத்தில் சகல மதஸ்தானங்களுக்கும் கிடைக்கும் வருவாயில் 14 வீத வரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் பீடாதிபதிகளை சந்தித்த அவர் இது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த 2006 இல் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வரி சட்ட திருத்தத்தில் சகல மதஸ்தானங்களுக்கும் எதுவித வரிகளும் அறவிடப்படாது என அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் விரைவில் கொண்டுவரவுள்ள உத்தேச வரி சட்ட மூலத்தில் சகல மதஸ்தானங்களுக்கும் கிடைக்கும் வருவாயில் 14 வீத வரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மகாநாயக்க தேரர்களிடம் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னாள் நிதி அமைச்சரினால் இந்த யோசனை உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## சமாதான நீதவான்களாக 400பேர் நேற்று நியமனம்

நீதியமைச்சினால் 400 சமாதான நீதவான் பதவிக்கான நியமனக் கடிதங்கள் நீதி மற்றும் பௌத்த விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் நேற்று பௌத்த விவகார அமைச்சில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற விவகார மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்கவும் நீதியமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) எம். மன்சூரும் கலந்து கொண்டனர்.

இந் நியமனங்களில் 105 பௌத்த குருமார்களுக்கும் 100 பௌத்த தகம் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் வழங்கப்பட்டன. இவற்றில் 10 முஸ்லிம்களும் 15 தமிழர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நள்ளிரவு வேளை வீடு புகுந்து மாணவியைக் கடத்த முயற்சி

நள்ளிரவு வேளை வீடு புகுந்து மாணவியைக் கடத்த முயற்சித்த கும்பலை மடக்கிப் பிடித்த இளைஞர்கள் நன்றாக கவனித்த பின் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இமையாணன் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் அத்துமீறி நுழைந்த 5 பேர் கொண்ட குழு வீட்டில் இருந்த வயோதிப மாது மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு மாணவியைக் கடத்த முயற்சி செய்தனர். இதன் போது வீட்டிலிருந்தோர் அபயக் குரல் எழுப்பியதை அடுத்து ஒன்றுகூடிய இளைஞர்களை கண்டதும் தாக்குதல் மேற் கொண்டவர்கள் தப்பியோட முயற்சித்தனர். இவர்களைச் சுற்றி வளைத்த இளைஞர்கள் அவர்களில் இருவரை மடக்கிப் பிடித்தனர். ஏனையவர்கள் ஹயஸ் வாகனத்தில் தப்பிச் செல்ல முயற்சித்தபோது அவர்களை யும் மடக்கிப் பிடித்தனர். வானுக்குள் இரண்டு பெண்களும் இரு இளைஞர்களும் இருந்துள்ளனர்.

இவர்களையும்பிடித்த இளைஞர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்பபடைத்தனர். இதேவேளை இக் கடத் தலுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் தப்பியோடித் தலைமறைவாகி விட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## கல்வியங்காடு பொதுச் சந்தையில் முதலமைச்சர் நேற்றுக் கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வியங்காடு பொதுச் சந்தையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்றைய தினம் கள ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

கல்வியங்காடு பொதுச் சந்தையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதாகவும் குறித்த சந்தை வியாபாரிகள் முதலமைச்சரிடம் முறையிட்டிருந்தனர்.

குறித்த முறைப்பாட்டினையடுத்தே முதலமைச்சர் நேற்று கள ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சந்தையில், மலசலகூட வசதிகள் சீரின்மை, சந்தையின் கழிவகற்றல் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து முதலமைச்சருக்கு வியாபாரிகள் எடுத்துக் கூறினர். அத்துடன் மகஜர் ஒன்றும் கையளித்திருந்தனர்.

குறைபாடுகளைக் கேட்டறிந்த முதலமைச்சர், குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவதாக வியாபாரிகளிடம் உறுதியளித்ததுடன் குறித்த பகுதியில் காணப்படும் குறைபாடுகளை சீர்செய்வது தொடர்பில் 3 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் பணிப்புரை விடுத்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்பேயிற்கு எதிரான டெஸ்டில் 388 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டியடித்து இலங்கை வரலாற்றுச் சாதனை

## ஆசியாவில் சிறந்ததும் உலகளாவிய ரீதியில் 5ஆவதுமான சேஷிங்குமாக பதிவு




கொழும்பில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே நிர்ணயித்த 388 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டி இலங்கை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்றது. இந்த டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய சிம்பாப்வே எர்வினின் (160) சதத்தால் 356 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணி தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் ஹேரத் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் இலங்கை அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. அந்த அணியின் உபுல் தரங்க (71), சண்டிமல் (55), மத்தியூஸ் (41), குணரத்ன (45) ஆகியோரின் ஆட்டத்தில் இலங்கை முதல் இன்னிங்சில் 346 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல் இன்னிங்சில் 10 ஓட்டங்கள் முன்னிலையுடன் சிம்பாப்வே 2-வது இன்னிங்சை தொடங்கியது. சிகந்தர் ரசாவின் அபார சதத்தால் (127) அந்த அணி 377 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணி தரப்பில் ஹேரத் 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து சிம்பாப்வே அணி 387 ஓட்டங்கள் அதிகம் பெற்றிருந்தது. இதனால் இலங்கை அணியின் வெற்றிக்கு 388 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்குடன் இலங்கை அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. 4-வது நாள் ஆட்டத்தில் இலங்கை 3 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குசல் மெண்டிஸ் 60 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 5-வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் தொடங்கியது. குசல் மெண்டிஸ் மேலும் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், மத்தியூஸ் மேலும் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டம் இழந்தனர். 6-வது விக்கெட்டுக்கு விகெட் காப்பாளர் டிக்வெல்ல உடன், குணரத்ன ஜோடி சேர்ந்தார். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

இதனால் இலங்கை அணி வெற்றியை நோக்கிச் சென்றது. இருவரும் அரைச்சதம் அடித்து தொடர்ந்து விளையாடி வந்த நிலையில், டிக்வெல்ல 81 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். இருவரும் 6-வது விக்கெட்டுக்கு 120 ஓட்டங்கள் குவித்து இலங்கை அணியின் வெற



றிக்கு உற்சாகம் அளித்தனர். டிக்வெல்ல ஆட்டமிழக்கும்போது இலங்கை 324 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டிக்வெல்லவையடுத்து பெரேரா களம் இறங்கினார். குணரத்ன, பெரேரா உடன் இணைந்து அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றார். இலங்கை அணி 114.5 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 391 ஓட்டங்கள எடுத்து நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. குணரத்ன - பெரேரா ஜோடி 7-வது விக்கெட்டுக்கு 67 ஓட்டங்கள் சேர்த்தது.

குணரத்ன 80 ஓட்டங்களுடனும், பெரேரா 28 ஓட்டங்களுடனும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். முதல் இன்னிங்சில 45 ஓட்டங்களும், 2-வது இன்னிங்சில் 80 ஓட்டங்களும் சேர்த்த குணரத்ன ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

## விரக்தி...

மங்கள சமரவீர சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் சிலரின் செயற்பாடுகள் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்பிக்கள் விரக்தியடைந்துள்ளதாக அறிய முடி கின்றது.

அமைச்சர் மங்கள சமரவீரவுடனான இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெறவுள்ளது என்றும் அந்தத் தகவல் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்புக்காக ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் பின்வரிசையைச் சேர்ந்த சகல எம்.பிக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதன்போது அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படும் என்றும் அந்தத் தகவல் தெரிவித்துள்ளது. (மு-11)

## ஜனாதிபதிக்கு...

வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவரும் இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, யாழ்ப்பாண நூலகத்திற்கும் வைத்தியசாலைக்கும் சிங்கப்பூர் வழங்கும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். (மு-11)

## ஊடகவியலாளரிடம்...

யாழ்.ஊடக அமையத்தில், கடந்த மே மாதம் 8ஆம் திகதியன்று, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவுள்ளமையால், அத்தினத்தில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடத்தப்படக் கூடாது என்றும் முல்லைத்தீவுக்கு விஜயத்தை ஜனாதிபதி மேற்கொள்ளக்கூடாது என்றும், அவ்வாறு வருகை தந்தால், கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்போமெனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக, ஊடகவியலாளர் பிரதீபனை, இம்மாதம் 10ஆம் திகதியன்று, கொழும்புக்கு வருமாறு குற்றப் புலனாய்வுத் துறையினர் அழைப்பு விடுத்திருந்தனர். எனினும், விபத்தில் சிக்கி நடமாட முடியாத நிலையில் உள்ளமையால், கொழும்புக்கு வரமுடியாது என பிரதீபன் தெரியப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குற்றப் புலனாய்வுத்துறையினர், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வைத்து, பிரதீபனிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். (மு-11)

## தேர்தலை...

அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் புதிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளது.

எனினும் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பொரளையிலுள்ள ஸ்ரீவஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (மு-11)

## தேசிய அரசு...

ப்பை நிறைவேற்ற முடியும்.

இரண்டு பிரதான கட்சிகளும் தங்களுக்கு இடையிலான போட்டிகளை கைவிட்டு அரசியலமைப்பை நிறைவேற்ற இணைந்து செயற்பட வேண்டும்.

தேசிய பிரச்சினையை தீர்க்க அவர்கள் உதவ வேண்டும். இதற்கு சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியினர் பலர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதாக எச்சரித்து வருகின்றனர்.

மறுபுறம் ஐ.தே.கவும் தனித்து ஆட்சியமைக்க முயன்று வருகின்றது. இவ்வாறான நிலை ஏற்பட்டால், அந்த சிறுபான்மை அரசால் அரசியல் அமைப்பை நிறைவேற்ற முடியாது என்பதை கருதியே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அரசியல் அமைப்பை நிறைவேற்றும் வரையாவது இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என கோரியுள்ளார். (மு-11)

## கேப்பாப்பிலவில்...

ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்றைய தினம் இந்த காணிகள் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

கேப்பாப்பிலவில் 279 ஏக்கர் காணி ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் படையினர் வசமிருந்த சுமார் 4500 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.


மீள்குடியேற்ற அமைச்சின் தகவல்களின் படி, யாழ். மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 2991.2 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 1000 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 474 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 49 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

## மரண அறிவித்தல்

# கந்தையா உதயராசா



கற்குளத்தை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா உதயராசா அவர்கள் 18.07.2017 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலம் சென்ற கந்தையா - கமலம் தம்பதியரின் புதல்வரும் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும் சுரேக்கானந் (காஸ்ரோ பிரான்ஸ்), சாளின் (வலம்புரி ஊடகவியலாளர்), ஜெல்சின் (யாழ். இந்துக் கல்லூரி கணிதப் பிரிவு மாணவன் 2012, உயர்தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் HNDE) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி, இராசலிங்கம் மற்றும் தர்மலிங்கம் (குட்டி), சமுத்திராகரன் (கனடா), நித்தியபூபதி, சந்திராவதி, அம்பிகாவதி (லில்லி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2017) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய வீதி, ஆறுகால் மடம், யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 0771713726, 0765373184

தகவல்: குடும்பத்தினர்

(C-9110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## அவைத் தலைவர் சிவஞானம் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எமது இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என தெரிவித்த வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், தற்போதைய அரசியல் முரண்பாடுகளை எமது அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கு இடமளிக்கமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

அவைத்தலைவர்களின் 8 ஆவது மாநாடு கடந்த 15 ஆம் திகதி யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. அதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழ் பேசும் மக்களுடைய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கின்ற மாகாண சபை முறைமை ஆரம்பித்து கிட்டத்தட்ட 30 வருடங்களாகின்ற நிலையில் அது உண்மையாகவே தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசமான வடக்கிற்கு கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பே உருவாகின.

வடக்கு மாகாணம் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் இந்த நாட்டினுடைய அரசியல், பொருளாதார, சமூகவியல் துறைகளில் மிகவும் தாக்கம் செலுத்துகின்ற ஒரு பிரதேசம். வரலாற்றுக்கு முன்னைய அதாவது அந்நியர்கள் இந்த நாட்டை ஆட்சிக்குட்படுத்துவதற்கு முன்பாக இருந்து இந்த நாட்டிலே மிகப் பெரிய மூன்று அரசுகள் இருந்தன. அதில் மிகப் பலமாக இருந்த அரசில் ஒன்றாக யாழ்ப்பாண அரசு இருந்தது. கடைசியாக பிரித்தானியர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்த பொழுது நிர்வாக வசதிக்காக 1833 இல் இந்த நாட்டை ஒருங்கிணைத்து ஒரு நாடாக்கினார்கள். இன்றுவரை இந்த நாடு ஒரு நாடாக, ஒரு நிர்வாகமாக இருக்கிறது.

இந்த வகையிலே தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரையில் நாங்கள் இந்த நாட்டின்பிரஜைகளாகசகோதரர்களாக சம உரிமையோடு எங்களுடைய மொழியையும், கலாசாரத்தையும், மதங்களையும் பாதுகாத்துக் கொண்டு எங்களுடைய பாரம்பரிய நிலங்களில் நிர்வாக முறையினை ஏற்படுத்தி அதில் வாழ்வதற்கே நாங்கள் விரும்புகின்றோம். இப்பொழுது நாங்கள் ஒரு தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

உண்மையாக நாங்கள் எதிர்பார்ப்பது எல்லாம் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். தெற்கத்தேய அர சியல் வாதிகள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி எந்த ஒரு கட்சிக்கும் நாங்கள் எதிராவனவர்கள் அல்லர். முன்பு இருந்த அரசாங்கமோ அல்லது தற்பொழுதுள்ள அரசாங்கமோ எதிர்காலத்தில் நிறுவப்படப்போகும் அரசாங்கமோ எதுவாக இருந்தாலும் எங்களுக்கான பிரச்சினைக்கு தீர்வினை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தற்போதைய சூழ்நிலையை அடுத்த தலைமுறைக்கு நாம் கொண்டு செல்வதற்கு இடமளிக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினை இனி மேலும் தொடராதிருப்பதற்காக ஒரு வழிவகைகளை காண்பதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்றாக ஒத்துழைத்து உயர வேண்டும். அதற்கு குறிப்பாக இந்த அரசாங்கமும் கூட்டு எதிரணியும் ஒத்துழைப்பு தரவேண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை அடுத்த மாதம்

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் அடுத்தமாதம் கையெழுத்திடவுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் இது தொடர்பான உடன்பாட்டை விரைவில் செய்து கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

துறைமுகத்தின் நிர்வாக மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை கையாளுவதற்காக இரண்டு தனித்தனியான நிறுவனங்களும் உருவாக்கப்படவுள்ளன.

நிர்வாகச் செயற்பாடுகளுக்காக உருவாக்கப்படும் நிறுவனத்தின் பெரும்பகுதி உரிமையை இலங்கைத் தரப்புகொண்டிருக்கும் எனவே, இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டியதில்லை.

எனினும், துறைமுக நடவடிக்கைகளைக் கையாளும் நிறுவனத்தில், சீன நிறுவனமே கூடுதல் பங்கு உரிமையைக் கொண்டிருக்கும். இதில், 80 வீத உரிமை சீனாவுக்கு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் உடன்பாடு கடந்த ஜனவரி மாதம் கையெழுத்திடத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், இதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்கள், அரசாங்கத்துக்குள் காணப்பட்ட முரண்பாடுகள் மற்றும் துறைமுக அதிகாரசபை சட்டத்தினால் காணப்பட்ட தடைகளால் இழுபறிப்பட்டு வந்தது.

தற்போது இந்த தடைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், உடன்பாடு அடுத்தமாதம் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)


பாராட்டுகின்றோம்

செல்வி.ஆன் சுமங்கலா குலநாயகம்



வல்வெட்டித்துறை நெடியகாடு சூசைப்பிள்ளை மங்களம் நல்லூர் இராசவீதி, சின்னத்துரை பெல்லா தம்பதிகளின் பேத்தியும் சூ.சேவியர் குலநாயகம் தேவஜோதி தம்பதிகளின் ஏக புத்திரியும் யாழ்.சுண்டிக்குழி மகளிர் கல்லூரி பழைய மாணவியுமான செல்வி. **ஆன் சும்ங்கலா குலநாயகம் அவர்கள் இன்று** 19.07.2017 இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்வதையிட்டு வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்,
வல்வெட்டித்துறை மக்கள் சார்பில்
எம்.கே.சிவாஜிலிங்கம்
வடக்கு மாகாணசபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.
வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர்.
0777729020
9843


## இராசி பலன்

19.07.2017
(ஆடி 03, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 2.01 மணிவரை
கார்த்திகை மாலை 5.40 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி - விசாகம் | | சூரி, செவ், புத |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்** காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உணவில் கட்டுப்பாடு தேவை.

**மிதுனம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், நல்ல தகவல்கள் உங்களை நாடி வரலாம், வாகன சுகமுண்டு.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# வடக்கில் 27 பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம்



வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 27 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனால் நேற்று முன்தினம் அமைச்சின் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. கணித,விஞ்ஞான,தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கே மேற்குறித்த ஆசிரியர் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (படங்கள்:-பொ.சோபிகா)

# மயானங்களை அகற்றக் கோரும் மக்கள் போராட்டம் தொடர்கிறது

மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து புத்தூர் கலைமதி மக்கள் மன்றம் முன் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 7 ஆவ்து நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன் கடந்த 15 ஆம் திகதி வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சந்திப்பு நடத்தியிருந்தார். இது தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழ் மகா சபை உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது வடக்கு மாகாணசபை நிர்வாகத்திற்கு உட்பட்டுஇருக்கும்மயானங்கள் பெரும்பான்மையானவை மக்கள் குடியிருப்புக்குள்ளேயே அமைந்திருக்கின்றன.

இதனால் மக்கள் பல சுகாதாரக் கேடுகளுக்கும் உளவியல் பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர். எனவே மக்கள் குடியிருப்பு பகுதிகளில் அமைந்திருக்கும் மயானங்களை அகற்ற வேண்டும் என மக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றோம் என அந்த அமைப்பினர் தெரிவித்தனர். (இ-10)








# பொலிஸ் நடமாடும் சேவை

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய நாடு முழுவதும் உள்ள பொலிஸ் பிரிவுகளில் நடத்தப்படும் பொலிஸ் நடமாடும் சேவை இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மார்வு குழல் ஆலய கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு பொலிஸ் நடமாடும் சேவை நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்நடமாடும் பொலிஸ் சேவை மூலம் காணாமல் போன காணி உறுதிகள், கடவுச்சீட்டு மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் போன்றவை தொடர்பாக முறைப்பாடு செய்து முறைப்பாட்டுப் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியும் என இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆ.ஆனந்தராசா அறிவித்துள்ளார். (இ-10-104)

# பாடசாலை சீருடை வழங்கலும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலகமும் பிரதேச சமூக அபிவிருத்திப் பிரிவும் இணைந்து நடத்தும் வறிய மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடை வழங்கலும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். நெடுந்தீவு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக வாழ்வின் எழுச்சி மாவட்டப் பணிப்பாளர் க. மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பங்குத் தந்தை வணபிதா.அ.ஜெயரஞ்சன், நெடுந்தீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் ச.கிருஷ்ணதாஸ், நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் கு.இரத்தினராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


# மிருசுவில் வடக்கில் வீதிப்புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து (PSDG) வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட 5 மில்லியன் ரூபாவில் மிருசுவில் வடக்கில் வீதி புனரமைக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனால் தெரிவுசெய்யப்பட்ட குறித்த வீதியானது 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)





# முன்பள்ளி மாணவர்களின் பாலர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர்களின் பாலர் விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மைதானத்தில் இடம்பெறும்.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு.சுந்தரசிவத்தின் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மறுமலர்ச்சி மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர் எஸ். நகுலேஸ்வரனும் கௌரவ விருந்தினராக மன்ற மூத்த உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மன்ற நலன் விரும்பியான இ.அற்புதராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)





வடமராட்சி பிரதேச செயலகத்துக்கு புதிய கலாசார மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார். இந் நிகழ்வில் பிரதேச செயலக ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- [illegible] செய்தியாளர்)

# யாழ்.வணிகர் கழகத்தின் நிர்வாக சபைத் தெரிவு

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை வணிகர் கழக பணி மனையில் நடைபெற்று புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

2017 ஆம் ஆண்டிற்கான யாழ். வணிகர் கழகத் தலைவராக இ.ஜெயசேகரனும் உப தலைவராக இ. ஜனக்குமாரும் செயலாளராக எஸ்.சிவகுமரனும் உப செயலாளராக எஸ். கேசவனும் பொருளாளராக எஸ்.தினேசனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 14 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர் என செயலாளர் ச.சிவகுமரன் அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?



## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

பேர்ணியாக வந்த ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் ஆற்றிய உரை காத்திரமாக-கனதியாக இருந்தது. அன்பார்ந்த தமிழ் உறவுகளே! உங்களின் எழுச்சியும் ஆதரவும் எமது பாதை சரி என்பதைச் சான்றுப் படுத்துகிறது, உற்சாகப்படுத்து கிறது. ஆம் என்றாலும் பதவியை நீக்குவார்கள். இல்லையென்றா லும் அதையே செய்வார்கள். முத லமைச்சர் பதவியிலிருந்து என்னை நீக்குவதுதான் அவர்களின் நோக் கம். அதற்காக அவர்கள் பல கார ணங்களைக் கூறுகின்றனர் எனக்குறிப்பிட்ட முதலமைச்சர் அன்பார்ந்த தமிழ் மக்களே! உங்களுடைய நலன் சார்ந்த சகல நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன் என்று உங்களுக்கு உறுதிமொழி அளிக்கின்றேன்.

இவ்வாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரை நீண்டு நிறைவு பெற்றது.

முதலமைச்சர் உரையாற்றும் போதெல்லாம் அவரின் உரையை ஆமோதித்தும் ஆதரித்தும் கரகோசங்கள் எழுந்தன. ஒரு கட் டத்தில் முதலமைச்சர் பதவியிலி ருந்து என்னை நீக்குவதுதான் அவ ர்களின் நோக்கம் என்று முதலமை ச்சர் கூறியபோது விடமாட்டோம், ஒரு போதும் விடமாட்டோம் என்ற கோசம் வானை முட்டிற்று. முதல மைச்சர் ஆற்றிய உரையைத் தொட ர்ந்து தமிழ் அரசியல் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் உரையாற்றினர்.

ஈற்றில் தமிழ்மக்கள் பேரவையின் சார்பில் நன்றியுரை வழங்கப் பட் டது. நன்றியுரைக்குப் பின்னர் அங்கு கூடி நின்ற மக்கள் நகர்ந்து செல்வதற்குச் சில மணி நேரம் ஆகியது.

இதனிடையே முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் தமிழ்மக்கள் பேர வையின் பிரதிநிதிகளும் ஏனைய முக்கியஸ்தர்களும் முதலமைச்சரைச் சந்தித்தனர்.

16.06.2017 அன்று வடமாகாணம் தழுவி நடந்த கடையடைப்புப் போராட்டம், பேரணி இவற்றின் மத் தியில் முதலமைச்சரின் பலம் ஓங்கி யிருப்பதை தமிழரசுக் கட்சியினர் உணர்ந்து கொண்டனர்.

கூடவே புலம்பெயர் நாடுகளில் இருந்து ஏகப்பட்ட தொலைபேசி அழைப்புகள் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராஜாவுக் கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கும் வந்த வண்ணம் இருந்தன.

வெளிநாடுகளில் இருந்து தமி ழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பு ஆகியவற்றின் அரசியல் பணிக ளுக்கு உதவுகின்றவர்கள் தொலை பேசியில் சற்றுக் கடுப்போடு கதை த்துக் கொண்டனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை உடனடியாக வாபஸ் பெறு மாறு அவர்கள் வலியுறுத்தினர்.

இச்சந்தர்ப்பத்தில் எனக்கு எது வும் தெரியாது, தம்பி மாவை. சேனா திராசாவுடன் கதையுங்கள் என்பதாக இரா. சம்பந்தரின் பதில் இருந்தது.

குருஷேத்திரத்தில் வியூகத்தை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற அபிமன்யு வியூகத்தை உடைத்துக் கொண்டு வெளியேவரத் தெரி யாமல் அந்தரித்து அவலப்பட்ட நிலைமைக்கு தமிழரசுக்கட்சி ஆளா கியது. இந்தளவு தூரம் எதிர்ப்புக்கள் வரும் என்று நாம் கனவிலும் கண் டிலோம். இப்போது என்ன செய்வது. இந்தப் பிரச்சினை யில் இருந்து வெளிவருவது எங்ஙனம் என்றெல்லாம் அவர்கள் மந்திராலோசனை நடத்தினர். ஒரு நிம்மதியற்ற சூழலால் தமிழரசுக் கட்சித் தலைமை பாதிக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில் பேரணி முடி ந்து ஒரு சில மணித்தியாலங் களில் முதலமைச்சர் விக்னே ஸ்வரன் அவர்கள் மதத்தலை வர்களைச் சந்திக்கும் பொருட்டு அவர்களின் இடங்களுக்குச் சென்றார். யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோருடன் முத லமைச்சர் சந்தித்தார். அந்தச் சந்திப்பு எங்கள் மதத்தலை வர்களுக்கு மதிப்புக் கொடுப் பதாக இருந்ததுடன் தன் பக் கத் துயரத்தையும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை யும் மதத் தலைவர்களுக்கு எடு த்தியம்புவதாகவும் அமைந் திருந்தது.

மதத் தலைவர்களுடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடத்திய சந்திப்பு மிகவும் பய னுள்ளதாகவும் இராஜதந்திர மாகவும் அமைந்திருந்தது.

ஒருபுறம் ஹர்த்தால் போரா ட்டம், மறுபுறம் மாபெரும் பேரணி, புலம்பெயர் தமிழ் உறவுகளின் தொலைபேசி அழைப்புக்கள், சமூக வலைத் தளங்களில் முதலமைச்சருக்கு ஆதரவான கருத்துக்கள், மதத் தலைவர்களுடனான முதல மைச்சரின் சந்திப்பு என அனைத்தும் பெரும் பரபரப் பாகியது. (வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குற்றவாளியைக் கைது செய்' ஆசிரியர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




(வுவனியா)

வவுனியா, செட்டிகுளம், முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் ஒருவர் மீது இளைஞர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்தும்,குற்றவாளிகளை கைது செய்யக்கோரியும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.


செட்டிகுளம், முதலியார் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை முன்னால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து நேற்றுக்காலை குறித்த ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர். நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் பாடசாலை முடிவடைந்து தனது ஆசிரியர் விடுதிக்கு திரும்பிச் சென்ற ஆசிரியரை வழிமறித்த நான்கு இளை ஞர்கள் அவரை இரு ம்பு கம்பியால் கடுமையாக தாக்கி யுள்ளனர். இதனால் காயமடைந்த ரஞ்சித் கண்ணா (வயது- 29) என்ற யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த ஆசிரியர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும், தாக்குதலாளிகளை பொலிஸார் உடனடியாக கைது செய்யக் கோரியுமே குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் " ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய், பொலிஸாரே குற்றவாளிகளை கைது செய்" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்த துடன் கோசங்களையும் எழுப்பினர்.

சம்பவ இடத்திற்கு வந்த செட்டிகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் தாக்குதல் நடத்திய நபர்கள் மூன்று தினங்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என உறுதிமொழி வழங்கியதையடுத்து போராட்டம்கைவிடப்பட்டது. (2-250)

# புகையிரதத்துடன் மோதுண்ட மாடு உடல் சிதறி பலி!



வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள வவுனியா புகையிரத நிலையத்திற்கு அண்மையாக யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 06.10 மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த உத்தரதேவி விரைவுப் புகையிரதத்தில் புகையிரத பாதையியைக் கடக்க முயன்ற பசு மாடு ஒன்று மோதுண்டு சம்பவ இடத்திலேயே தலை வேறு உடல் வேறாகி உயிழந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம்திங்கட்கிழமை காலை 8.15 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும், தெரிய வருவதாவது,

குறித்த உத்தரதேவி விரைவுப் புகையிரதம் வவுனியா புகையிரத நிலையத்தை அண்மித்த வேளை அதனை நிறுத்துவதற்காக அதன் வேகம் குறைக்கப்பட்டு புகையிரதம் பயணித்த வேளை திடீரென பசுமாடு ஒன்று புகையிரத பாதையைக் கடக்க முயன்ற வேளை இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன்போது, புகையிரதத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத போதும் பசுமாடு சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியானது.

இதனையடுத்து, புகையிரத நிலையத்தில் கடமையில் இருந்த புகையிரத பாதுகாப்பு பொலிஸார், வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், 45 நிமிடங்களுக்கு மேல் புகையிரதம் தாமதித்து வவுனியாவில் இருந்து மீண்டும் கொழும்பு நோக்கி பயணத்தை தொடர்ந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மழை வேண்டி யாகபூசையும் 1008 இளநீர் அபிஷேகமும்

## கிளிநொச்சியில் நடைபெற்றது




கிளிநொச்சியில் மழை வேண்டி இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தில் யாக பூசை ஒன்றும் ஆயிரத்து எட்டு இளநீர் கொண்டு கனகாம்பிகை அம்மனுக்கு அபிஷேகமும் நேற்றுக்காலை செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தை நம்பி மேற்கொள்ளப்பட்ட குறைந்தளவு ஏக்கர் சிறுபோக நெற்செய்கையில் கூட மழை இன்மையால் குளத்தில் இருந்த மிகக்குறைந்த அளவு நீர் மட்டம் கூட குறைந்து செல்வதனால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் மழை வேண்டி யாக பூசை ஒன்றும் ஆயிரத்து எட்டு இளநீர் கொண்டு கனகாம்பிகை அம்மனுக்கு அபிஷேகமும் கிளிநொச்சி விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மழை இன்மையால் கிளிநொச்சியில் சில கிராமங்களில் நிலத்தடி நீர் வற்றிய நிலையில் குடிநீரிற்கு கூட தட்டுப்பாடான நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312)




## வணிகமாணி கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மேற்படி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இக்கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கேம்பிரிஜ் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் காலை 8.30 மணிக்கும் மன்னார் சித்தி விநாயகர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் முற்பகல் 11 மணிக்கும் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆகையால் இக்கற்கை நெறியைத் தொடர விரும்பும் க.பொ.த.உயர்தரம் பரீட்சை -2015 ஆம் ஆண் டிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலப் பகுதியிலோ வணிகப் பிரிவில் சித்தியடை ந்தவர்கள் கலந்துகொள்ளு மாறு அவர் கேட்டுள்ளார். (2)

## ஆடிப்பிறப்பு நிகழ்வு

வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் சிறுவர் இல்லத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு,நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணியளவில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது. (2)

# எங்களின் பிரச்சினைகள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை

## கரைச்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குற்றச்சாட்டு




(பரந்தன்)

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை இதனால்தான் கிராம மக்கள் ஆகிய நாங்கள் எல்லோரும் இங்கு வந்திருக்கின்றோம் என கிளிநொச்சி நகர கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மாவை. சேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி சங்கத்தினர் நமது பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதன்போது கிளிநகர் கிராம மக்கள் தங்களின் காணி பிரச்சினை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் எவையும் தீர்த்து வைக்கப்படவில்லை. இறுதியாக 25-01-2016 கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது எங்களது பிரச்சினை தீர்க்கப்படும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் அத் தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

அதனால்தான் மக்களாகிய நாங்கள் வந்திருக்கின்றோம். எங்களுக்கு தீர்க்கமான முடிவு வேண்டும் எனக் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கிளிநகர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தனியான ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வது எனவும் அதனை எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்பாடு செய்யுமாறும் அங்கு குறித்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

2016-01-25 ஆம் திகதி இடம்பெற்றதன் பின்னர் தற்போதே கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று (நேற்று) இடம் பெற்றது. இதன்போது வீட்டுத்திட்டம், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், காணி, சமுர்த்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன

ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான த. குருகுலராஜா, சு.பசுபதிபிள்ளை, அரியரத்தினம் மற்றும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஹரிகணன் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. ஆடிப்பிறப்பின் சிறப்புக் குறித்த உரையை யாழ். தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்த நன்றியுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் கரைச்சிப் பிரதேச கலாசார உத்தியோகத்தருமாகிய கு.ரஜீபனும் ஆற்றினார். கிளிநொச்சி கல்வி வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஹரிகணன் நிறுவனத்தாரால் நாவலர் திருவுருவச் சிலைகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் இறுதியில் மகாதேவா சிறுவர் இல்லப்பிள்ளைகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# சொகுசு காரில் கடத்தப்பட்ட கேரளக் கஞ்சா சிக்கியது

## சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது




(மல்லாவி)

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு சொகுசு மோட்டார் காரில் கடத்திச் செல்லப்பட்ட 02. கிலோவும் 200. கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் 06. சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக கனகராயன்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9. 30. மணியளவில்கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ - 09. வீதியின் 214. ஆவது மைல் கல் பகுதியில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கனகராயன்குளம்பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி அபயு கோன் பண்டாரவின் விசேட உத்தரவுக்கமைய கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பிரிவிலும் மற்றும் ஏ-09 வீதியிலும்சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் வீதியில் பயணித்த மோட்டார் கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது கேரளாக் கஞ்சாவை மிக நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு கடத்திச் சென்றமை கண்டு பிடிக்கப் பட்டது.

இதனையடுத்து மோட்டார் காரினையும், கேரளக் கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றியதுடன் அதனை கொண்டு சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதில் பயணித்த கண்டிப் பகுதியைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களையும் கைது செய்து கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதுடன், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகவும் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15-250)

# மீள்குடியேறுவதற்கு 233 குடும்பங்கள் பதிவு

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மீள்குடியேற 233 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன், சிவஞானம் சிறிதரன் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

முகமாலை பகுதியில் வெடிபொருட்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு பல இடங்கள் இதுவரை விடுவிக்கப் படவில்லை. இதுவரை விடுவிக்காத பகுதிகளில் மீள்குடியேறுவதற்காக 233 குடும்பங்களும் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

அதாவது இத்தாவில் பகுதியில் 8 குடும்பங்களும், முகமாலை பகுதியில் 86 குடும்பங்களும், வேம்பொடுகேணி பகுதியில் 139 குடும்பங்களும் மீள்குடியேற விண்ணப்பித்துள்ளன.

இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டுள்ள போதும் இந்தப் பகுதிகளில் வாழ்ந்த அதிகளவான மக்கள் இன்னும் பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

கடந்த வருடமும் விடுவிக்காத பகுதிகளில் குடியமர என குறைந்தளவான குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டிருந்தன. எனினும் அந்த பகுதி விடுவிக்கப்பட்ட பின்னர் 78 குடும்பங்களைச்சேர்ந்த 245 பேர் மீள் குடியமர்ந்துள்ளனர்.

இந்த பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் 52 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் உட்பட வசதிகளை பெற்று தருமாறு கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

மேலும், இவர்களுக்கான வீட்டுத்தேவை தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாகவும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு நாங்கள் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம் என பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் கூறினார். (2)



கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் மூதாட்டி ஒருவரின் சக்கர நாற்காலி பழுதடைந்துவிட்டதாகவும் ஓர் புதிய நாற்காலியை தந்துதவுமாறு போராடும் அம்மக்களை சந்திக்கச்சென்ற வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் புதிய சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

இச்சக்கர நாற்காலியானது முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாற்றுவலுவுள்ளோர்களை உறுப்பினர்களாக கொண்டு இயங்கும் ஒளிரும்வாழ்வு அமைப்பினருக்கு யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர். நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டு ஒளிரும்வாழ்வு அமைப்பிடமிருந்து குறித்த மூதாட்டிக்கு பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டுள்ளது.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

வன்னி வலம்




கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை, கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றில் போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 245 உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் கிளி/ பளை மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றுகின்ற ம.மதிதாஸின் ஊடாக குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி-மகிந்தவிற்கு இடையில் இனி சமரசப் பேச்சு கிடையாது

## உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு எதிரணி தனித்துப்போட்டி

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் எவ்விதமான இணக்கப்பாடுகளுக்கோ அந்த கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சமரச பேச்சுக்களுக்கோ இனி கூட்டு எதிர்க் ட்சி செல்லாது. நவம்பரில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றால் கூட்டு எதிர்க்கட்சி தனித்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் கூடிய கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் முக்கிய பல தீர்மானங்களைஎடுத்துள்ளனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் தற்போது செயற்படுகின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிடவுள்ளது. ஏற்கனவே கிராமிய மட்டத்திலான தயார்படுத்தல்கள் நிறைவடைந்துள்ளன. வடக்கு மற்றும் கிழக்கிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு ள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியுடன் எவ்விதமான சமரச பேச்சுக்களுக்கும் செல்லப் போவதில்லை என்ற உறுப்பினர்கள் மத்தியிலான உறுதிப்பாடுகளும் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் சம்மேளனத்தின் தலைவர் உதேனி அத்துகோரள தெரிவித்தார்.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதிவாரத்தில் நடத்துவதற்கு அதிகளவு சாத்தியம் காணப்படுவதாக பிரதமர் அறிவித்துள்ளார். இந்நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளன. எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் 60 வீதம் தொகுதிவாரியாகவும் 40 வீதம் விகிதாசார முறையிலும் நடத்துவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

கலப்பு முறைமையில் நடத்தப்படும் இத்தேர்தலில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் போட்டியிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கிலும் மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க இளைஞர்களை கட்சிக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (இ-7)

## உமா ஓயா திட்டம் தொடர்பான உபகுழு அறிக்கை சமர்ப்பிப்பு

உமா ஓயா திட்டம் தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கண்டறிய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான அமைச்சரவை உபகுழு அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

குறித்த குழு பண்டாரவளை பகுதிக்கு நேரில் சென்று மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கண்டறிந்த அறிக்கையே இவ்வாறு நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உமா ஓயா திட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அக்கராகாரம்

Botonical Name- Anacyelus Pyrethrum
Family - Compositae
English - Pellitory
Sinh- Akkrakkara

பல்லாண்டு காலம் வாழும் செடி இனத்தைச் சேர்ந்தது. மேல் நோக்கிய கிளைகளைக் கொண்டது. தண்டுகளில் உரோம அமைப்புக்கள் காணப்படும்.

ஒன்று விட்ட இலையமைப்பு, மெல் லிய பிளவு பட்ட இலைகள் காணப்படும். பூந்துனர் முடி வில் மெல்லிய மஞ்சள் நிற மான பூக்கள் காணப்படும். இருபாலான பூக்கள் காண ப்படும்.

கோள வடிவ பழங்களைக் கொண்டது.

இது வட அமெரிக்கா, அல்ஜீரியா நாட்டைத் தாயகமாகக் கொண்டது. இந்தியாவில் மருந்துத் தேவைக்காக பயிரிடப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அக்கராகாரம் செடி வளரா விட்டாலும் இதன் வேரின் மருத்துவ குணங் களுக்காக வேரை தமிழ் மருந்துக் கடைகளில் உலர் சரக்காக வாங்கலாம்.

இதன் வேரை நாக்கிலிட்டு சுவைத்தால் உமிழ்நீர் அதிகம் பெருகும். வாயிலும் தொண்டையிலும் விறுவிறுப்பு அதிகம் உணரப்படும். சிறிது உறைப்பும் உஷ்ண வீரியமும் உள்ளது. நாக்கின் தடிப்பை குறைத்து ருசி உணரும் சக்தியையும் பேசும் சக்தியையும் கூட்டுகிறது.

சிறு குழந்தைகளுக்குப் பேச்சு தெளிவாக இல்லாமல் குழறல் இருந்தால், நாக்கு தடித்து பேச்சு தடைப்பட்டிருந்தால், இவ் அக்கராகார வேரை நிழலில் உலர்த்தி மிக மென்மையாக பொடித்து 10 மில்லி கிராம் அளவு தேனில் குழைத்து நாக்கில் தடவ நாக்கு மெதுவாக இஷ்டப்படி புரண்டு கொடுக்கும். பேச்சு தெளியும். குரல் மென்மையடையும். நாக்கிலுள்ள சுவை உணரும் நரம்பு மண்டலத்திற்கும் நாக்கிலும்தொண்டையிலும்உள்ள பேச்சு, குரல் நரம்பு மண்டலத்திற்கும் பலம் தருகிறது. மூளைக்கு நர ம்புகளிற்கு பலம் தரும்.

சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் இழுப்பு வலிப்பு நோய்களில் மூளையின் அழற்சியை குறைத்து கிரமமாக வேகத்தைக் குறைத்து வலிப்பு நிற்க இதன் வேர்த் தூளில் 1-2 மி.கி அளவு கொடுத்து வரலாம்.

பல்வலி, ஈறுகள், நாக்கு உணர்வற்று இருத்தல். இலைகளில் இதன் தூளை வேதனை உள்ள இடங்களில் வைக்க உடனே வலி, வேதனை குறையும்.

பல்வலி, உண்ணாக்கு வளர்ச்சி, தொண்டைக் கம்மல், நா அசைவற்றுப் போதல், காய்ச்சலினால் உண்டாகும் வறட்சி ஆகிய இவைகள் ஒரு சிறிய அக்கராகாரத் துண்டை வாயிலிட்டு மென்று வருவதாலும், அக்கராகாரத்தை ஊறல் நீர் செய்து வாய் கொப்ப ளித்து வருவதாலும் நீங்கும்.

**தொண்டைத் தாபிதம், லசுன தாபிதத்திற்கு (Tonsilitis)**

அக்கராகாரம் (வேர்) ,அதிமதுரம் (வேர்), சிற்றரத்தை [illegible] ஒவ்வொன்றும் ஒரேயளவாக எடுத்து தனித்தனியாக பொடித்து ஒன்றாக சேர்த்து பசுவின் பால் விட்டரைத்து விழுது 1 பங்குடன், பசுவின் பால் வேகவைத்த பேரிச்சம்பழத்தை அரைத்த விழுது 4 பங்கு சேர்த்து, போதுமான அளவு தேன் விட்டு குழைய அரைத்தெடுத்து, விரலால் எடுத்து நாவிற் தடவ காய்ச்சல், நாவறட்சி நீங்கி தொண்டைத் தாபிதமும், லசுனதாபிதமும் குறையும். நாவில் தடவ உமிழ்நீரும் கூடுதலான அளவு சுரந்து தொண்டையில் சுரப்பு பட்டுப் போவதால்தாபிதமும்நீங்கும்.

லசுன தாபிதத்திற்கு ( Tonsilitis) அக்கராகார வேரை குடிநீர் காய்ச்சி வாய் கொப்பளித்து வர தாபிதம் குறையும். அல்லது அக்கராகாரவேர் 100 கிராமை நுண்ணியபொடியாக்கிஅதில் 1 கிராம் பொடியைக் குழைத்து சாப்பிட்டால் திக்கு வாய் குணவாகும்.

அக்கராகாரம், அரிசித் திப்பிலி இரண்டையும் ஒரேயளவாக எடுத்து அரைத்து பொடி செய்து, அதில் 2 கிராம் பொடியை தேனில் குழைத்துச் சாப்பிட்டு வந் தால் நாட்பட்ட நுரையீரல் சார்ந்த நோய்கள் குண மடையும்.

அக்கராகாரம் வேர் 200 கிராம் எடுத்து ஒரு மண் பானையில் போட்டு வல்லாரைச் சாற்றை மூழ்கும்படி விட்டு வெயிலில் காலை முதல் மாலை வரை சாறும் சுவறுமட்டும் விட்டு அரைத்து 65 மி.கிராம் மாத் திரைகளாக காலை, மாலை தேனில் சாப்பிட்டுவர வலி ப்பு நோய் நீங்கும்.


அக்கராகாரத்தை பொடி செய்துஅதில்2கிராம்பொடியை கோழி முட்டை யின் மஞ்சட் கருவில் குழைத்து சாப்பிட்டு வர நரம்புகளை பலப்படுத்தி வலிப்பு குறையும்.

அக்கராகாரம், அதிமதுரம், கரிசலாங்கண்ணி மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து 2 கிராம் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் குரற் கம்மல், கரகரப்பு நீங்கும்.

அக்கராகாரம், ஆடாதோடை, நிலவேம்பு மூன்றையும் சம அளவு எடுத்து பொடி செய்து, 2 கிராம் பொடியை 3 வேளையும் தேனில் குழைத்து சாப் பிட்டால் Tonsilitis (இலசின தாபிதம்) நீங்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் தலைமை ஏன்? ஈ.பி.ஆர்.எல்.எவ். விளக்கம்

ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைக் கையாள்கின்ற பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் சுமத்தப்பட்டது. அப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. யுத்தத்திற்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வவுனியா நகரசபைக்கும் யாழ். மாநகரசபைக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. முகாமில் அடைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பாகவும் ஒட்டுமொத்த யுத்தம் தொடர்பாகவும் வன்னி மக்களும் யாழ்ப்பாண மக்களும் எத்தகைய உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக இலங்கை அரசாங்கம் இந்த இரண்டு தேர்தல்களையும் நடத்தியது.

வேட்புமனுக்களில் கையெழுத்திட்டு தேர்தல் திணைக்களத்திடம் கையளிப்பதற்கேகூட தமிழரசுக் கட்சியின் செயலாளர் வவுனியா வரமுடியாத நிலையில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு ஒருநாள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அநுராதபுரம் சென்று மாவை. சேனாதிராஜாவின் கையெழுத்து வாங்கி வந்து வேட்பாளர்களை நியமித்து அந்தத் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம். வேட்பாளர்களாகப் பெயர்கொடுத்தவர்கள் பலர் இறுதி நேரத்தில் பின்வாங்கினர். அப்படியிருந்தபொழுதிலும் கூட கூட்டமைப்பு வெல்ல வேண்டும். அதன் மூலம் அரசாங்கத்திற்கு தெளிவான செய்தி சொல்லப்படவேண்டும் என்பதை முன்னிறுத்தி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிகடுமையாகப்போராடி வவுனியா நகரசபைத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனத்தை வெற்றிகொள்ள வைத்தது. பயத்தின் நிமித்தம் வேட்பாளர்களே ஒதுங்கியிருந்த நிலையிலும் தமிழரசுக் கட்சி பிரசாரத்திற்கு வருவதற்கே அஞ்சிய நிலையிலும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே அந்த வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

இதனைப்போன்றே யாழ். மாநகரசபை தேர்தலிலும் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் ஒருவரும் முன்வராத நிலையில் குறிப்பாக இளைஞர்கள் முன்வராத நிலையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருந்து இளைஞர்களை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி களமிறக்கியது. அது மாத்திரமல்லாமல், வேட்பாளர்களே பிரசாரத்திற்கு வருவதற்கு அஞ்சிய நிலையில், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும்தான் வீதி வீதியாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அரும்பாடுபட்டன.

இவ்வாறு இராணுவத்தினதும் புலனாய்வுப் பிரிவினரதும் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும் ஐக்கியத்தைக் காக்கவும் மக்களுக்கு நம்பிக்கையூட்டவும் தமிழினம் தோற்றுவிடவில்லை என்பதை நிலைநாட்டவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் தங்களது கட்சிச் சின்னங்களை விடுத்து வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டன. இவ்வாறுதான் தமிழரசுக் கட்சி காப்பாற்றப்பட்டது என்பதை இன்று பதவிக்காக வந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒவ்வொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் மிகத் தெளிவாக வரையறை செய்யப்பட்டன.


1.வடக்கு-கிழக்கு மீண்டும் இணைக்கப்பட வேண்டும்.

2.தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை என்பவை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

3.சமஷ்டி அரசியல் அமைப்பு முறையிலான அதிகாரப் பங்கீடு மேற்கொள்ளப்படவேண்டும்.

4.இவை எல்லாவற்றின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசத்தில் ஒரு சுயாட்சி அரசு உருவாக்கப்பட வேண்டும்.

இந்தக் கொள்கைகளின் அடிப்படையில், ஓர் தீர்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டோம். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகள் அவசியம் என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. குறைந்த பட்சம் பேச்சுவார்த்தைகள் குழம்புகின்றபொழுது யாரால் எவ்வாறு பேச்சுவார்த்தைகள் குழம்பின என்பதை சர்வதேச சமூகம் அறிந்துகொள்வதற்காகவாவது இந்த மூன்றாம் தரப்பு தேவைப்பட்டது. ஆனால், அதனை தமிழரசுக் கட்சி தவிர்த்தே வந்தது. பேச்சுவார்த்தைகளை நிராகரித்த மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதாகவும் அங்கு சென்று எமது பிரச்சினைகள் தொடர்பாகப் பேசும்படியும் கூறியபொழுது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அதனை நிராகரித்தது. மேற்சொன்ன நான்கு முக்கியமான விடயங்களில் இருதரப்புக்கும் இடையில் முடிவுகள் எட்டப்பட்டால் மாத்திரமே பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் செல்வதில் பிரயோசனம் இருக்கும் என்று நாம் வலியுறுத்தினோம். அதன் பின்னரே கூட்டமைப்பின் தலைவர் தெரிவுக்குழுவுக்குச் செல்வதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.



இப்பொழுது அவ்வாறானதொரு பேச்சுவார்த்தை புதிய அரசாங்கத்துடன் ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியபோதும் இன்று அதனை ஏற்றுக்கொள்வதற்கு சம்பந்தன் அவர்கள் தயாராக இல்லை. மாறாக 51பேர் கொண்ட ஒரு அரசியல் சாசன வழிநடத்தல் குழுவில் இந்த விடயங்கள் எல்லாம் பேசப்படும் என்று எமக்குச் சொல்லப்பட்டது. அது ஒரு சரியான வழிமுறையல்ல. வழிநடத்தல் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்களில் மிகப் பெரும்பான்மையோர் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் எமது கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்படும் என்றும். ஆகவே இருதரப்புப் பேச்சுவார்த்தை என்பது முக்கியம் என்றும் நாம் வலியுறுத்தியபோதும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

1. வடக்கு-கிழக்கு இணைக்கப்படமாட்டாது. இது தொடர்பாக யாரும் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று அரச தரப்பின் அமைச்சர்களும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்டவர்களும் கூறுகின்றனர்.

2. ஒற்றையாட்சியில் எந்தவித மாற்றமும் இல்லை. அதனை யாரும் கோரவுமில்லை எனவும் அரச தரப்பினரால் மகாநாயக்கர்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது.

ஆனால்இவைதான்எமது அடிப்படைப் பிரச்சினைகள். இவற்றைமையமாகவைத்துத்தான் பேசுவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டவர்கள் நாம். அரச தரப்புடன் இவ்வாறுதான் பேசினோம். அரச தரப்பினர் பொய் கூறுகிறார்கள் என்றுகூட தமக்கு வாக்களித்த மக்களுக்குச் சொல்ல முடியாமல், வாய் அடைத்துப்போய் நிற்பதைப் பார்க்கின்றபொழுது இவர்கள் ஒட்டுமொத்தமாகவே தமிழ் மக்களின் சகல கோரிக்கைகளையும் கைவிட்டு விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

புதிய அரசாங்கத்தைக் கொண்டுவருவதனூடாக பல சாதனைகளைப் படைக்கலாம் என்று கூறி புதிய ஜனாதிபதிக்காக வாக்கு சேகரித்துக் கொடுத்தவர்களால் மக்களை தமது சொந்தக் காணிகளில் முழுமையாக மீளக் குடியேற்றமுடியவில்லை.

இராணுவத்தினரின் வசமுள்ள காணிகளை மீட்டெடுக்க முடியவில்லை.

வடக்கு மாகாணத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் ஆக்கிரமிப்பைக் குறைக்க முடியவில்லை. காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் காத்திரமான முடிவுகள் எதனையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்ய முடியவில்லை.

யுத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. வடக்கு-கிழக்கெங்கும் பௌத்தர்கள் வாழாத இடங்களில் உருவாக்கப்படும் பௌத்த விகாரைகளை கட்டாமல் நிறுத்த முடியவில்லை.

இவ்வாறு எந்த விடயங்களிலும் ஒரு முறையான பேச்சுவார்த்தையை அரச தரப்புடன் நடத்தி அதன் சாதக, பாதக விடயங்களை மக்களுக்குத் தெரிவிக்க முடியாத ஒரு தலைமையாகவே சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சி இயங்கி வருகிறது.

இது ஒருபுறமிருக்க, ஒரு சர்வதேச விசாரணையூடாகவே இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வர முடியும் என்பதுடன், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சர்வதேச விசாரணை என்பது மிக அவசியம் என்பதை மகிந்த ராஜபக்ஷவின் காலகட்டத்தில் வலியுறுத்திவந்த சம்பந்தன் பின்னர் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை அரசாங்கம் முன்வைத்த உள்ளக விசாரணையை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்லாமல், அதன் மூலம் சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கையைப் பாதுகாக்கவும் முற்பட்டார்.

அப்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்தவிற்கும் ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கும் இடையில் கொழும்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒரு பிரகடனத்தின் பிரகாரம் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் ஓராண்டிற்குள் மீளக்குடியமர்த்தப் படுவார்கள் என்று கூறிய போதிலும்கூட எதுவுமே நடைபெறவில்லை. இதன் பின்னர், பான் கீ மூன் அவர்களால் தருஸ்மன் தலைமையிலான மூன்றுபேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டு அது இலங்கையில் நடைபெற்ற மனிதவுரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்தது. இதனடிப்படையில் இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை நடைபெற்றதற்கான சாத்தியப்பாடு உள்ளதென்றும் அதனைத் தொடர்ந்தும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தார்கள். இதனடிப்படையில் ஐ.நா. செயலாளர் நாயகம் அந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் கையளித்து தொடர்ந்தும் இலங்கை தொடர்பாக அவதானம் செலுத்தும்படி கோரியிருந்தார்.

இதன் பிரகாரம் ஐ.நா, மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவது என்று முடிவு செய்தபோதிலும் 2012ஆம் ஆண்டு ஐ.நாவிற்குச் செல்வதற்கான தேவையில்லை என்ற முடிவை சம்பந்தர் எடுத்தார். அந்த முடிவுகூட சம்பந்தரின் தனிப்பட்ட முடிவாக இருந்ததுவே அன்றி கூட்டமைப்பின் முடிவாக இருக்கவில்லை.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பம் முதல் இன்று வரை தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தியது மாத்திரமல்லாமல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் அதன் அங்கத்துவ நாடுகளிலும் தனித்தும் கூடாகவும் இதனை வலியுறுத்தி வந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் இத்தகைய விசாரணைகள் தொடர்பாக திட்டவட்டமான நிலைப்பாடுகள் சம்பந்தரிடமோ தமிழரசுக் கட்சியிடமோ இல்லாததால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செயற்பாட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான செயல்களில் ஈடுபடவும் சம்பந்தரது நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன.

மனிதவுரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் சித்திரவதைகள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக அத்துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேச நிபுணர்கள் கூறிய போதிலும்கூட் அவையெல்லாவற்றையும் கைவிட்டு. இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச விசாரணை இன்றேல், எந்தவிதமான தீர்வும் எட்டப்படமுடியாது என்று கூறிவந்த சம்பந்தர் தனக்கும் தமது சகாக்களுக்கும் சில வசதிகளும் வரப்பிரசாதங்களும் கிடைத்ததன் காரணமாக தாமே முன்வைத்த சகல கோரிக்கைகளையும் கைவிட்டதாகவே தோன்றுகின்றது.

ஆகவே அடிப்படையில், சம்பந்தனதும் தமிழரசுக் கட்சியினதும் காய் நகர்த்தல் என்பது மிகப் பெரிய தோல்விகளையே சந்தித்து வருகிறது. (தொடரும்)

**சுரேஷ் க.பிரேமச்சந்திரன்**
தலைவர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜெயா வழக்கு முடித்து வைப்பு



(டில்லி)

சட்டசபை தேர்தலில் 4 தொகுதிகளில் போட்டியிட ஜெயலலிதா வேட்புமனு தாக்கல் செய்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 2001ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலின் போது கிருஷ்ணகிரி, புவனகிரி, ஆண்டிப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிட மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் 2 தொகுதிகளுக்கு மேல் வேட்புமனு தாக்கல் செய்வது தேர்தல் விதிமுறைகளுக்குப் புறம்பானது என்று கூறி குப்புசாமி எம்.பி. உச்ச நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் வழக்கை சென்னை உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்குமாறு உத்தரவு பிறப்பித்ததன் அடிப்படையில் வழக்கு சென்னை உயர் நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையின் போதே மனுதாரரான குப்புசாமி எம்.பி. கடந்த 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் காலமானார். எனவே மனுதாரரின் மரணத்தை காரணம் காட்டி சென்னை உயர் நீதிமன்றம் இந்த வழக்கை தள்ளுபடி செய்தது.

ஆனால் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிக்க வேண்டும்என நாகப்பட்டினம்தொகுதி முன்னாள் எம்.பி.யான ஏ.கே.எஸ்.விஜயன் உச்ச நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் ஒரு மனுதாரர் குப்புசாமி காலமாகி இருந்தாலும், இந்த விடயத்தில் தான் ஏற்கனவே தேர்தல் ஆணையத்தில் புகார் தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கைத் தொடர தனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என ஏ.கே.எஸ்.விஜயன் சார்பில் உச்ச நீதிமன்றில் வாதிடப்பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் ஜெயலலிதா மீதான வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. இந்த வழக்கின் மீதான விசாரணை நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர்; நீதிபதி டி.வை.சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது.

ஆனால் விசாரணை தொடங்கியதும், ஜெயலலிதா காலமாகி விட்டதால் தற்போது இந்த வழக்கு காலாவதியாகி விட்டது எனக்கூறி நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர். (இ-3)

## கர்நாடக டி.ஐ.ஜி. ரூபா மாற்றத்திற்கு புதுச்சேரி ஆளுநர் கிரண்பேடி எதிர்ப்பு





(புதுச்சேரி)

டி.ஐ.ஜி. ரூபாவை மாற்றியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தவறுகளை வெளிக் கொண்டு வருவதைத் தடுப்பது போல நமது சிஷ்டங்கள் இருப்பதை இது காட்டுகிறது என்று புதுவை மாநில ஆளுநர் கிரண்பேடி காட்டமாகத் தெரிவித்தார்.

கர்நாடக சிறையில் விதிமுறைகளுக்கு மாறாக சசிகலாவுக்கு வசதிகள் செய்து கொடுத்துள்ளதை டி.ஐ.ஜி. ரூபா அம்பலப்படுத்தினார்.

இதற்காக புதுவை ஆளுநரும், திகார் சிறை முன்னாள் தலைமை அதிகாரியுமான கிரண்பேடி டி.ஐ.ஜி. ரூபாவுக்கு பாராட்டுத் தெரிவித்தார். இந்தப் பணிகளை தைரியமாக தொடர வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.

அதற்கு ரூபா நன்றி தெரிவித்ததுடன் கிரண்பேடி ஆதரவால் எனக்கு 100 யானைகளின் பலம் கிடைத்துள்ளது என்றும் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ரூபா சிறைத் துறை டி.ஐ.ஜி. பதவியில் இருந்து மாற்றப்பட்டார். இதற்கு கிரண்பேடி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

டி.ஐ.ஜி. ரூபாவை மாற்றி இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தவறுகளை வெளிக் கொண்டு வருவதை தடுப்பது போல நமது சிஷ்டங்கள் இருப்பதை இது காட்டுகிறது.

ரூபாவை மாற்றியதற்கு பதிலாக இந்த பிரச்சினைக்கு எந்த வகையில் தீர்வு காண வேண்டும்என்பதை இப்போது கவனித்திருக்க வேண்டும். அதற்கான நேரம்தான் இது. ஆனால் வேறு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்.

ரூபா எந்த பதவிக்கு சென்றாலும் இதேபோல தைரியத்தோடும், நம்பிக்கையோடும் செயற்பட வேண்டும் என கிரண் பேடி மேலும் தெரிவித்தார். (இ-3)

## தும்கூரு சிறைக்கு சசிகலாவை மாற்ற கர்நாடக உள்துறை பரிந்துரை



(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் ஏற்பட்ட விதிமுறை மீறலைத் தொடர்ந்து சசிகலாவை தும்கூரு பெண்கள் சிறைக்கு மாற்ற கர்நாடக உள்துறை முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற கர்நாடக அரசு திட்டமிட்டு உள்ளது.

வேறு யாராவது உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்தால் அந்த மனுவுக்கு பதில் அளிக்கும்போது சசிகலாவை தும்கூரு சிறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாக கர்நாடக அரசு தரப்பில் நீதிமன்றில் தெரிவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் உடனடியாக சசிகலாவை பரப்பன அக்ரஹார சிறையில் இருந்து மாற்ற முடியாது. 15 நாட்கள் முதல் ஒரு மாதம் வரை இதற்கு ஆகும் எனத் தெரியவருகிறது. (இ-3)

## மசூதிக்கு பெண் தீ

### 8 பேர் உ



(மைடுகுரி)

நைஜீரியா நாட்டின் வடகிழக்கு பகுதியிலுள்ள மசூதியில் நேற்று முன்தினம் போகோஹறாம் தற்கொலைப் படையை சேர்ந்த பெண் தீவிரவாதி நடத்திய மனிதகுண்டுத் தாக்குதலில் 8 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

நைஜீரியா நாட்டின் போர்னோ மாநில தலைநகரான மைடுகுரி நகரில் போகோஹறாம் தீவிரவாதிகளின்

## இரட்டை இலைச்சின்னம் பெற இலஞ்சம்

### தினகரன் மீது 25ஆம் திகதி குற்றப்பத்திரிகை

(டில்லி)

இரட்டை இலைச்சின்னம் பெற இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் தினகரன் மீது 25 ஆம் திகதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் படவுள்ளது.

அ.தி.முகவில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து இரட்டை இலைச் சின்னம், கட்சி பெயர் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இரட்டை இலைச் சின்னத்தை திரும்ப பெறுவதற்காக தேர்தல் ஆணையத்திற்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், உதவியாளர் மல்லிகார்ஜுனா, இடைத் தரகர் சுகேஷ் சந்திரசேகர் மற்றும் ஹவாலா தரகர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது டில்லி சிறப்பு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் டி.டி.வி.தினகரன் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி டில்லி நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் தரகர் சுகேஷ் சந்திரசேகர் பெயர் மட்டும் குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்று இருந்தது. டி.டி.வி.தினகரன் பெயர் இல்லை. இதனால் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டாரா? என்ற கேள்வி எழுந்தது.

இதுபற்றி டில்லி பொலிஸார் கூறும்போது, தற்போது முதலாவது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்து 2-வது குற்றப் பத்திரிகையில் டி.டி.வி.தினகரன் பெயர் இடம் பெறும் என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில் வழக்கு விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுகிறது. சிறப்பு நீதிபதி பூனம் சவுத்திரி முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வருகிறது. அன்றைய தினம் 2-வது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது

டி.டி.வி.தினகரன் சுகேஷ் சந்திரசேகர் இடையிலான உரையாடல்கள், பணம் கைப்பற்றப்பட்டது உள்ளிட்ட ஆதாரங்களுடன் 701 பக்க அறிக்கையை நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்யவுள்ளனர். (இ-3)

## மரபணு மாற்றம்

### சீன விஞ்ஞானிகள் அசத்தல்

(லண்டன்)

மரபணு மாற்றம் மூலம் 'கொழு கொழு' சுப்பர் நாய்களை சீன விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். சீனா விண்வெளி, புகையிரதம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முன்னேறி வருகிறது. தற்போது பலம் பொருந்திய 'கொழு கொழு' சுப்பர் நாய்களை உருவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# தீவிரவாதத் தாக்குதல்களால் ஆப்கானில் ஆறு மாதத்தில் ஆயிரத்து 662 பேர் பலி!

## ஐ.நா. சபை அறிவிப்பு



(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத் தாக்குதல்களால், கடந்த ஆறு மாத காலத்தில் சுமார் ஆயிரத்து 662 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை நேற்று அறிவித்துள்ளது.**

ஆப்கானிஸ்தானில் தீவிரவாத தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த தாக்குதல்கள் பாகு தலிபான்கள் மற்றும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புகளால் நடத்தப் படுகின்றன. கடந்த ஆறு மாத காலமாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 1,662 பேர் உயி ரிழந்துள் ளதாகவும், 3500 பேர் காய மடைந் துள்ளதாகவும் ஐ.நா. சபை அறிவித் துள்ளது.

உயிரிழந்தவர்களில் 20 சதவிகிதம் பேர் தலைநகரான காபூலில் நடைபெற்ற தாக்குதல்களில் இறந்துள்ளனர். கடந்த மே மாதம் காபூலில் நடத்தப்பட்ட கார் வெடி குண்டு தாக்குதலில் 150-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதுவே இந்தாண்டு ஆப்கானில் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாக கருதப்படுகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதமாக நடைபெற்ற தாக்குதல்களில் 174 பெண்களும், 436 குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதல்களில் இறந்தவர்களைவிட அதிகமாகும்.

ஐ.நா. சபையின் தகவல்களின்படி, 2009-ம் ஆண்டு ஜனவரி முதல் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களில் 26,500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 49,000 பேர் காயமடைந்துள்ளனர். (இ-3)

## 97 வயதில் பட்டம்பெற்றார் இரண்டாம் உலகப் போர் வீரர்



(நியூசிலாந்து)

அமெரிக்காவில் இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற சார்லஸ் லியீஸ்ஸி என்ற வீரர், 97 வயது ஆகும் நிலையில் தான் படித்த பாடசாலையிலிருந்து பட்டத்தை பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள தெற்கு பிலாடெல்பியா நகரைச் சேர்ந்தவர் சார்லஸ் லியீஸ்ஸி. தற்போது 97 வயதாகும் சார்லஸ் இரண்டாம் உலகப்போர் சமயத்தில் தனது பழ்ப்பை பாதியிலேயே விட்டு விட்டு இராணுவத்தில் சேர்ந்து போரில் பங்கேற்றார்.

போரில் பங்கேற்று பதக்கங்களையெல்லாம் பெற்ற பின்னர், ஓய்வுக்காலத்தில் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் சார்லஸ்க்கு விட்டுப்போன படிப்பின் பட்டத்தை பெற வேண்டும் என்ற ஆசை துளிர் விட்டுள்ளது.


தனது ஆசையை குடும்பத்தினரிடம் அவர் சொல்ல, அவரது குடும்பத்தினர் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதனையறிந்த பிலாடெல்பியா மாவட்ட பாடசாலை நிர்வாகம், மகிழ்ச்சியுடன் சார்லஸின் ஆசையை நிறைவேற்றியுள்ளது. 2017-ம் ஆண்டிற்கான பட்டம் பெறும் மாணவர்களுடன் சார்லஸ்க்கு பட்டம் வழங்கியுள்ளது.

தன் குடும்பத்தினரின் முயற்சியே இதற்கு காரணம் என்று சந்தோசமாகத் தெரிவித்தார். (இ-3)

# ...ள் தற்கொலைப்படை தீவிரவாதி தாக்குதல்

## ...உயிரிழப்பு!



...க்கம் அதிகமாகவுள்ளது. இந்...ன் மத்திய பகுதியிலுள்ள லண்...சிக்கி பகுதியில் மிக பிரபலமான ... ஒன்றுள்ளது.

(உள்ளூர் நேரப்படி) நேற்று முந்தி... அதிகாலை சுமார் 5.30 மணி...யில் இந்த மசூதியின் அருகே ...ரியூரை சேர்ந்த ஒரு பெண்ணின் ...நடமாட்டத்தை கண்ட சிலர் சோத...யிட முயன்றனர். அவர்களிடம் பிடிபடாமல் தப்பியோடிய அந்தப் பெண் அருகாமையில் உள்ள மசூதிக்குள் புகுந்து கதவை தாளிட்டுக் கொண்டாள்.

பிடிப்பதற்கு சிலர் பின் தொடர்ந்து வருவதைக் கண்ட அந்தப் பெண் தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டுகளை திடீரென்று வெடிக்க வைத்தாள். இதில், அந்தப் பெண்ணும் அவளை விரட்டிவந்தவர்களில் எட்டு பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 15 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இந்த தாக்குதலில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மசூதிக்குள் தாக்குதல் நடந்த அதேவேளையில் மைடுகுரி நகரின் மற்ற பகுதியில் உடலில் வெடி குண்டுகளுடன் தாக்குதல் நடத்தவந்த மூன்று பெண் தீவிரவாதிகளும் உடல் சிதறிப் பலியாகினர்.

மாமான்ட்டி என்ற இடத்தில் பொதுமக்களிடம் இருந்து தப்பியோட முயன்ற இரு பெண் தீவிரவாதிகள் குண்டுகள் வெடித்து உயிரிழந்தனர். சிமாரி என்ற இடத்தில் ஒரு பெண் தீவிரவாதி குண்டுகளை வெடிக்க வைத்து உயிரிழந்தாள்.

இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வரும் நைஜீரியாவில் இஸ்லாமிய சட்டதிட்டத்துக்கு உட்பட்ட அரசை நிறுவ வேண்டும் என்று கூறி ஒரு பிரிவினர் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபகாலமாக தற்கொலைப் படை தாக்குதலுக்கு இவர்கள் பெண்களை அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். (இ-3)

## வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராக 71 இலட்சம் மக்கள் வாக்களிப்பு

(கராகஸ்)

அரசியல் சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராக 71 இலட்சத்து 86 ஆயிரத்து 170 பேர் வாக்களித்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னமிரிக்க நாடான வெனிசுலாவில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ பதவி விலக எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றன. போராட்டத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தை திருத்த போவதாக மதுரோ அறிவித்தார். அதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தலை அறிவித்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் நாடு முழுவதும் பொது வாக்கெடுப்பு நடத்தின. வெளி நாடுகளில் வாழும் வெனிசுலா மக்கள் வாக்களிக்க வசதியாக வாக்குச் சாவடிகளும் அமைக்கப்பட்டன. மொத்தம் 2 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் ஏராளமான பொது மக்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

மொத்தம் 71 லட்சத்து 86 ஆயிரத்து 170 பேர் ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக வாக்களித்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2013-ம் ஆண்டு மதுரோ ஜனாதிபதியான போது அவருக்கு 70 லட்சத்து 50 ஆயிரம் வாக்குகளும், 2015 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 70 லட்சத்து 70 ஆயிரம் வாக்குகளும் கிடைத்தன. தற்போது அவருக்கு எதிராக 71 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இராணுவக் கப்பல் கவிழ்ந்து விபத்து

## 34 பேர் மாயம்!



(கேமரூன்)

மத்திய ஆபிரிக்க நாடான கேமரூனில் இராணுவ கப்பல் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 34 பேர் மாயமாகியுள்ளனர், மாயமானவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விபத்துக்குள்ளான இராணுவ கப்பலில் 37 பேர் இருந்தனர் என்றும், அதில் 3 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்வெளியாகியுள்ளது. (இ-3)

## ...லம் 'கொழு கொழு' நாய்கள்



...ளது.

...சாதனைக்குழாய் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த நாய்கள் மற்ற ...களை விட பலமடங்கு எடை ...கொண்டது. 'கொழு கொழு' என ...ந்துள்ளன.

...இவை அதிக பலம் வாய்ந்ததா..., மிக வேகமாக பாய்ந்து சென்று ...களை வேட்டையாடும் தன்மை ...கொண்டவை. இவற்றை பாதுகாப்புக்காகவும், பொலிஸிலும் பயன்படுத்தலாம்.

பீஜிங்கில் உள்ள பயோ தொழில்நுட்ப நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த நாயை உருவாக்கி யுள்ளனர். சாதரண நாயில் உள்ள 'மயோஸ்டேடின்' என்ற மரபணுவை நீக்கி புதிய சூப்பர் நாய்களை உருவாக்கினர். இந்த தொழில்நுட்பத்தில் நாய்களை உருவாக்கிய 2-வது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது. முதலிடத்தில் தென்கொரியா உள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சசிகலாவுக்கு சிறப்பு சலுகையா?

# பெங்களூர் சிறையில் 200இற்கும் மேற்பட்ட கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்








சிறையில் சசிகலாவுக்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் நீண்ட வராண்டாவுடன் கூடிய அடுத்தடுத்த அறைகளை படத்தில் காணலாம் இப்படி 5 அறைகள் வரிசையாக உள்ளன.




பொருட்கள் வைக்கப்பட்டுள்ள அறை



வராண்டாவுடன் கூடிய தனிப்பட்ட அறை



அறைக்கதவில் துணி போட்டு இருப்பதை படத்தில் காணலாம்



சசிகலாவுக்கு ஒதுக்கப்பட்ட மற்றொரு அறை

(பெங்களூர்)

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் கைதிகளுக்கு சிறப்புச் சலுகை அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 200 இற்கும் மேற்பட்ட கைதிகள் காலை உணவைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. (அம்மா) அணியின் பொதுச் செயலாளர் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறைவாசம் அனுபவித்து வரும் சசிகலாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அவ்வப்போது தகவல்கள் வெளியாகி வந்தன. ஆனால் அவருக்கு சிறையில் எந்தவொரு சிறப்புச் சலுகையும் வழங்கப்படவில்லை என்றும் சாதாரண கைதி போலவே அவர் நடத்தப்படுகிறார் என்றும் சிறைத்துறை அதிகாரிகள் கூறி வந்தனர்.

இந்த நிலையில், பரப்பன அக்ரஹார சிறையில் கடந்த 10ஆம் திகதி, டி.ஐ.ஜி.யாக இருந்த ரூபா ஆய்வு செய்த பின்பு, அங்கு சசிகலாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இதுதொடர்பாக கடந்த 12ஆம் திகதி சிறைத்துறை டி.ஜி.பி.யாக இருந்த சத்திய நாராயணராவிடம் அவர் அறிக்கையும் தாக்கல் செய்தார். அந்த அறிக்கையில் சசிகலாவுக்கு தனி சமையல் அறை உட்பட சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக ரூ.2 கோடி இலஞ்சம் வாங்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டி இருந்தார்.

இதனையடுத்து, ஊடகங்களில் விதிகளை மீறி பேட்டி அளித்த குற்றச்சாட்டிற்காக டி.ஐ.ஜி ரூபா நேற்று முன்தினம் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

அவருடன் மூத்த ஐ.பி.எஸ். அதிகாரிகள் 4 பேரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். டி.ஜி.பி. சத்திய நாராயணராவ் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறையில் கைதிகளுக்கு சிறப்பு சலுகை அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் 200இற்கும் மேற்பட்ட கைதிகள் நேற்றுக்காலை உணவைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய சிறை கண்காணிப்பாளராக அனிதா நியமனம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 1.30 மணியளவில் தொடங்கியது. சமையல் அறை மற்றும் நிர்வாக அறைக்கு அருகில் திரண்ட 200 இற்கும் மேற்பட்ட கைதிகள் சிறையின் தலைமை கண்காணிப்பாளர் கிருஷ்ண குமாரை உடனடியாக மாற்றக் கோரி முழக்கங்களை எழுப்பினர்.

கிருஷ்ணகுமார் மாற்றப்பட்டதாக செய்திகள் வெளியானதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில், [illegible]திகள் மீண்டும் நேற்றுக் காலை உணவை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-3)

# நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது

## முன்னிலை சோசலிசக்கட்சி விசனம்



(கொழும்பு)

நெவில் பெர்னாண்டோ தனியார் போதனா வைத்தியசாலை அரசிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசுடைமையாக்கப்பட்டுள்ளது என செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை என கட்சியின் கல்விப் பிரிவு செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலை பத்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். நிறுவனம் ஒன்றை குத்தகைக்கு எடுப்பதற்கும், அதனை அரசுடைமையாக்குவதற்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருட முற்பட்ட இளைஞன் கைது

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவின் பாதுகாப்பு பெட்டியைஉடைத்துபொருட்களைத் திருட முயன்ற இளைஞன் ஒருவர் அங்கு நின்ற இளைஞர்களால் நையப்புடைக்கப் பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.இச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்.மின்சார நிலைய வீதியில் இடம் பெற்றது.யாழ் நகரப்பகுதியில் அண்மைக் காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் ஆட்டோக்களில் தொடர்ச்சியாக இவ்வாறான திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக ஆட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர். (இ-10-85)

# தொழில்நுட்பவியலாளர்கள் பணிப்புறக்கணிப்பு போர்

(கொழும்பு)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்பவியலாளர்கள் 18 கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றில் ஈடுபடப்போவதாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பத்து வருடங்களாக தாம் முன்வைத்து வரும் பிரச்சினைகளை அதிகாரிகள் உதாசீனம் செய்து வருவதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, தங்களது போராட்டத்தின் முதல் கட்டமாக நேற்று முன்தினம் முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத வீதிகளில் பணிகளில் ஈடுபடுவதையும், தொலைபேசி மூலமாக வழங்கி வந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை நிறுத்திக்கொண்டிருப்பதாகவும் அச்சபையின் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஜோர்ஜ் அநுராத தெரிவித்துள்ளார். (இ-7)

# பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்கு தன்னியக்க சமிக்ஞைகள் பொருத்துதல்

(கொழும்பு)

அளுத்கம மற்றும் களுத்துறை வடக்குக்கு இடையிலான பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைப் பிரதேசங்களுக்கு, தன்னியக்க சமிக்ஞைகள் பொருத்தும் நடவடிக்கைகளை, புகையிரத திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

அளுத்கமயிலிருந்து கரையோர புகையிரத சேவை இடம்பெறும் 18 இடங்களுக்கு, இந்த சமிக்ஞைகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

இந்த சமிக்ஞைகள் பொருத்தும் இடங்கள், இது வரை காலமும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைப் பகுதிகளாகவே காணப்பட்டன என்று, திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# அரசிலிருக்க முடியாவிட்டால் வெளியேறலாம்-வெத ஆராச்சி

அரசாங்கத்தில் இருக்க முடியாத எந்தவொரு நபரும் அரசிலிருந்து வெளியேற முடியும் என இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராச்சி தெரிவித்தார்.

மேலும், யார் வெளியேறினாலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அகுணுகொலபெலஸ்ஸ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே திலிப் வெத ஆராச்சி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 648 வகை போதைப் பொருட்கள் இலங்கையில் பாவனையில்!

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(கொழும்பு)

648 இற்கும் அதிகமான போதைப் பொருள் வகைகள் இலங்கையில் பாவனையில் உள்ளதாக ஜனாதிபதி போதைப் பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்வேறு முறைமைகளில் வெளிநாடுகளிலிருந்து இப்பொருட்கள் நாட்டினுள் எடுத்துவரப்படுவதாக பணிப்பாளர் சமந்த குமார ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இவை நாட்டினுள் கடல் மார்க்கமாகவே கடத்தல்காரர்களினால் அதிகமாக எடுத்துவரப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையின் உயர்கல்வி மேம்பாட்டுக்கு 10 கோடி அமெரிக்க டொலர் கடன் உதவி



உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கமும் சர்வதேச மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியும் இணைந்து இலங்கையின் உயர் கல்வி மேம்பாட்டுக்கு உதவ முன்வந்துள்ளன.

இதற்காக இவ்விரு நிறுவனங்கள் உயர் கல்வியை விஸ்தரித்து, அதனைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு பத்துக் கோடி அமெரிக்க டொலரை கடனாக வழங்க முன்வந்துள்ளன. இதற்கானதொரு திட்டத்தை அமுலாக்குவது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி கருதி உயர் கல்வித் துறையில் ஆட்சேர்ப்புக்களை அதிகரித்தல், உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்தல், ஆய்வு, அபிவிருத்தி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை அதிகரித்தல் முதலான மூன்று விடயங்கள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# எந்தவொரு நாட்டுக்கும் விசா வழங்குவது தடை செய்யப்படவில்லை - அரசு அறிவிப்பு

எந்தவொரு நாட்டுக்கும் விசா வழங்குவது தடை செய்யப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. சில நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிக்க விசா வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து வெளிநாட்டவர்களுக்கும் வழமை போன்று விசா வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். எவ்வாறெனினும் சிரியா, பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளின் பிரஜைகளுக்கு விசா வழங்கும் போது விசேட கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

வர்த்தகம், சுற்றுலா, கல்வி உள்ளிட்ட எந்தவொரு தேவைக்காகவும் இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு விசா வழங்குவதில் காலம் தாழ்த்தப்படாது என தெரிவித்துள்ளார். (இ-7)

# பௌத்த பீடங்கள் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## உலமா சபை வலியுறுத்து

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு விவகாரம் தொடர்பான தமது நிலைப்பாட்டை நான்கு பௌத்த பீடங்களும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை வலியுறுத்தியுள்ளது.

நாட்டுக்கு புதிய அரசியலமைப்போ, அரசியல் அமைப்புத் திருத்தங்களோ தேவையில்லை என பௌத்த பீடங்கள் அண்மையில் தெரிவித்திருந்தன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல இன மக்களையும் பல சமயங்களையும் கொண்டுள்ள இலங்கைக்கு மத சுதந்திரத்தையும் உரிமைகளையும் வழங்கக் கூடிய புதியதோர் அரசியலமைப்பு அவசியம் எனவும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை புதிய அரசியலமைப்பை வரவேற்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.




மேலும் பெரும்பான்மை சமூகத்தின் உரிமைகள், அம்மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் என்பவை தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அவற்றை நாம் எதிர்க்கவுமில்லை. என்றாலும் இலங்கையில் முஸ்லிம்களுக்குத் தனியான சட்டம் தேவையில்லை, தமிழர்களுக்குத் தேசவழமை சட்டம் தேவையில்லை என இனவாத அமைப்புக்கள் விவாதிப்பது தவறானதாகும். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களும் தமது சமயங்களை அனுஷ்டிப்பதற்கு உரிமையுண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### காரியம் ஆனதும் கை கழுவலாமா?

காரியம் ஆகும்வரை எல்லாப் பற்களையும் காண்பிப்பார்கள். நெளிவார்கள்; குழைவார்கள்; வார்த்தைகளைப் பசப்புவார்கள்.

காரியம் முடிந்துவிட்டாலோ, ஏதோ புதுப் பிறவி எடுத்தவர்களைப் போல் முற்றிலும் மாறி விடுவார்கள். பணிவும் குழைவும் பறந்துவிடும். வார்த்தைகளில் "ஏற்றம்" தெரியும்... மொத்தத்தில் நிமிர்ந்து விடுவார்கள்.

சிலர் அடுத்த கட்டத்திற்குப் போய், புறக்கணிக்கும் செயலையும் மதியாத் தன்மையையும் அலட்சியப்படுத்தும் போக்கையும் கடைப்பிடிப்பார்கள்.

இதுதான் மனித சுபாவம். ஆனால் இதை நாம் வெல்ல வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் நாம் இந்த விடயத்தில் விதி விலக்கானவர்களாக விளங்க வேண்டும்.

இந்த நல்ல பண்பைக் கற்றுக் கொள்வது என்பது நம் வளர்ச்சிக்குத்தான். எப்படி என்று சொல்கிறேன்.

இத்தகையவர்களை இந்த உலகம் வெகு சீக்கிரமே புரிந்து கொண்டு விடுகிறது. அவனா? சரியான காரியவாதியாச்சே! என்று முத்திரை குத்தி விடுகிறது.

இத்தகையவர்களுடன் பழகும் மனிதர்கள் எவரும் இது மனித சுபாவம் தான் என்று பழகிப் போன விடயமாக எடுத்துக் கொள்வதில்லை. மாறாக மனத்திற்குள் இருக்கும் பேரேட்டில் ஒரு பக்கத்தை இந்த மனிதருக்கென ஒதுக்கி ஒரு பெரிய கரும் புள்ளியைக் குத்தி வைத்துவிட்டு மூடி விடுகிறார்கள். அவ்வளவுதான். தீர்ந்தது கதை! அதாவது இவர்கள் பெயரைச் சொன்னாலே போதும். இதயம் சுருங்கிப் போகும். எதற்கும் அது அசைந்து கொடுக்காது.

நம்ம வேலை முடிஞ்சுது; இனிமே அந்த ஆளு தயவு நமக்கு எதுக்கு? என்பது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை மட்டும் சந்தித்து விட்டுப் பிரிந்து விடுகிற நபருக்கு வேண்டுமானால் பொருந்தலாம்.

ஆனால் தினம் தினம் அல்லது அடிக்கடி (ஏன் – எப்போதாவது ஒரு முறை என்று கூட வைத்துக் கொள்ளுங்களேன்) சந்திக்க வேண்டியிருக்கிற ஒரு நபரிடம் இத்தகைய ஒரு மனநிலையுடன் பழகுவது மிக ஆரோக்கியக் குறைவான விடயமாகும்.

மனிதாபிமானம், விசுவாசம், பிரியம், மரி யாதை இவற்றையெல்லாம் காரியம் ஆகிறவரை காட்டுவது என்பதும், சுயநலத்தோட சம்பந்தப்படுத்திக் கொள்வதும் மாபெரும் தவறுகளாகும்.

இவை எப்போதும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். நபருக்கு நபர் விகிதாச்சாரம் சற்றே கூடலாம். குறையலாமே தவிர, காரியம் ஆனதும் இவற்றை இருட்டடிப்புச் செய்யக் கூடாது.

சொல்லப் போனால், காரியம் ஆன பிறகு இவை அதிகப்பட வேண்டும். இப்படிச் செய்வது அடுத்த காரியம் ஆவதற்கு அட்வான்ஸ் கொடுத்து வைப்பதைப் போன்றது. காரியவாதிகளுக்கு இது ஏன் புரியவே மாட்டேன் என்கிறது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெவில் வைத்தியசாலை ஏன் அரசுடைமையாக்கப்பட்டது

## கம்மன்பில விளக்கம்

(கொழும்பு)

சைட்டம் மருத்துவ கல்லூரியை நடத்த தேவையான நோயாளர்களை நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கு பெற்றுக்கொடுப்பதற்கான ஒப்பந்தத்தையே அரசாங்கம் நேற்று முன்தினம் நிறைவேற்றியது என மகிந்த சார்பு குழு எம்.பி. உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு நெவில் பெர்னாண்டோவைத் திருப்திப்படுத்துவதே முக்கியமாகப் போயுள்ளது என நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசுடைமையாக்குமாறு சைட்டம் எதிர்ப்பில் ஈடுபட்ட எவரும் கோரவில்லை. சைட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்குமாறே கூறினர்.

சைட்டம் மற்றும் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை ஆகிய இரண்டும் ஒன்றல்ல வேறுவேறு. நெவில் பெர்னாண்டோ என்பது தனியார் வைத்தியசாலை, சைட்டம் என்பது சட்ட விரோத வைத்திய பீடம்.

நோயாளர்கள் இன்றி, சைட்டம் வைத்திய பீடத்தை நடத்த முடியாது. நெவில் பெர்னாண்டோவின் பிரச்சினைக்கே அரசாங்கம் இவ்வொப்பந்தத்தின் மூலம் தீர்வை வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# ஐ.எஸ்ஸில் இணைந்துள்ள 6 இலங்கையர்களுடன் இலங்கையிலுள்ள 70 பேருக்குத் தொடர்பு

## இந்திய புலனாய்வுத் துறை தகவல்

ஐ.எஸ்.சர்வதேச பயங்கரவாதிகளுடன் இணைந்து இஸ்லாமிய இராச்சியத்துக்காகப் போராடும் ஆறு இலங்கையர்கள் சிரியாவில் இருப்பதாகவும் அவர்களுடன் இலங்கையிலுள்ள 70 பேருக்குத் தொடர்பு இருப்பதாகவும் இந்தியப் புலனாய்வுத் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிக்கு ஆதரவு வழங்கிய இலங்கையரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது இந்த உண்மைகள் தெரியவந்துள்ளதாக புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் ஐ.எஸ். உடன் இணைந்து கொள்வதற்காக ஆறுபேர் இலங்கையிலிருந்து சிரியா சென்றுள்ளதாகவும் குறித்த சந்தேக நபர் குறிப்பிட்டுள்ளார். அபுதுஜான் தஜுதீன், நிலாம், இஸான், நிலாம், நஸ்தீர் தாஜுதீன், ரோஸ் மற்றும் அமீன் ஆகிய பெயர்களையுடையவர்களே இவர்கள் எனவும் குறித்த சந்தேக நபர் தகவல் வழங்கியுள்ளார்.

இந்த ஆறு பேருடன் அவர்களுடைய குடும்ப உறுப்பினர் சுமார் 70 பேர் சிரியாவுக்கு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதாகவும் இந்திய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது. (இ-7)

# உதய கம்மன்பிலவுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்



பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை கொழும்பு மேல் நீதிமன்றம் தற்காலிகமாக நீக்க தீர்மானித்துள்ளது.

முன்னதாக, குவைத் நாட்டுக்குச் செல்ல அனுமதியளிக்குமாறு கம்மன்பில நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (இ-7)

# புதிய வைத்திய அதிகாரிகள் சபையை அமைக்க அமைச்சர் ராஜித முயற்சி

(கொழும்பு)

புதிய வைத்திய அதிகாரிகள் சபை ஒன்றை உருவாக்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன முயன்று வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள மத்தியகுழுக் கூட்டத்தில், சைட்டம் தொடர்பான பிரச்சினை மற்றும் எதிர்காலத்தில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயற்பாடுகள் ஆகியன தொடர்பில் கலந்துரையாட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மாணவர்களுக்கு விருது வழங்கல்

கொமர்ஷல் வங்கியில் “அருணலு” திட்டத்தின் கீழ் கணக்கினைப் பேணி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் 3 இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொமர்ஷல் வங்கியின் சுன்னாகக் கிளையில் இடம்பெறும். (இ-3)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



லயன். பாலசிங்கம் சுரேஸ் குமார் அகில இலங்கை சமாதான நீதவானாக மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ரி. கருணாகரன் முன்னிலையில் கடந்த 14 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ். மாநகர சபையின் அரச முகாமைத்துவ உதவியாளரும் வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவரும், மனித உரிமை மக்கள் பாதுகாப்பு அமைப்பின் வட பிராந்திய இணைப்பாளரும் ஆவார். இவர் தேச கீர்த்தி, தேசமானி போன்ற தேசிய விருதுகளும் உலக சைவத் திருச்சபையினால் சமூக திலகம் போன்ற உயரிய விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சைட்டத்திற்கு எதிராக கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

கொழும்பு, கோட்டைப் பகுதியில், சைட்டத்துக்கு (தொழில் நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகம்) எதிராக, முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக, செரமிக் சந்தியிலிருந்து என்.எஸ்.ஏ சுற்றுவட்டம் வரையான லோட்டஸ் வீதியினூடான வாகனப் போக்குவரத்து, மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக தொடர் போராட்டம் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தேக நபர்கள் 54 பேர் பிணையில் விடுவிப்பு

கடந்த 15.06.2017 அன்று நுவரெலியா நானுஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தின் போது அசாதாரண நிலைமையை ஏற்படுத்தியதாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 42 பேரையும் நேற்று முன்தினம் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த 12 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு நேற்று நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி ருவான் டி சில்வா உத்தரவிட்டுள்ளதாக நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அரியந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரையும் தலா 10,000 ரூபா ரொக்கப் பணமும் 150,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்ல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா நானுஓயா பகுதியில் கடந்த 15.06.2017 அன்று காலை 7.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் லொறியில் மோதுண்டு சிறுமி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இதனை தொடர்ந்து நானுஓயா நகரில் அசாதாரண சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. இதன்போது பொதுமக்கள் ஆத்திரமடைந்து குறித்த லொறியை தீ மூட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக நானுஓயா பொலிஸாரால் 42 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அது தவிர 12 பேருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இவர்களுக்கு எதிராக, சட்டத்திற்கு முரணாக ஒன்று கூடியது, பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது, அரசாங்க அதிகாரிகளுக்கு கடமையை செய்ய விடாமல் தடை ஏற்படுத்தியது, கலகத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டது ஆகிய குற்றங்கள் பொலிஸாரால் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 28.09.2017 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஷிராந்தியிடம் விசாரணை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டு எதிர்க்கட்சி இணைவதற்கு கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான அழைப்பு தெளிவான அரசியல் சூழ்ச்சி.என கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சாடியுள்ளார்.

இதேவேளை மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணையின் தொடர்ச்சியாகவே ஷிராந்தி ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவினர் விளக்கப்படுத்தியுள்ளனர். (இ-7)

# பொருளாதாரத்தை பலப்படுத்த அரசாங்கம் பாடுபடுகிறது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நிதி முகாமைத்துவத்தில் இருக்க வேண்டிய தூய்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை பாதுகாத்து, தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக அரசாங்கம் பாடுபடுவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று முன்தினம் ஆரம்பமான பணச்சலவை தொடர்பான ஆசிய பசுபிக் பிராந்திய குழுவின், 20ஆவது வருடாந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பண சலவை தொடர்பில் அனைத்து நாடுகளும் முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றிகொள்வதாயின், அது தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பிணைப்புகள், உடன்பாடுகள் மற்றும் சமவாயங்களை உரியவாறு அமுல்படுத்துவதற்கு அனைத்து நாடுகளும் நேர்மையுடன் பாடுபட வேண்டும்.

"பணச்சலவையை தடுப்பதன் மூலம் அனைத்து நாடுகளிலும் தேசிய பொருளாதாரம் பலமடையும். மேலும், சர்வதேச ரீதியிலும் நிதி முகாமைத்துவத்தில் மிக முக்கியமானது.

"அரச நிதி முறைகேடு மற்றும் பணச்சலவை தொடர்பில் செயற்படுவதற்காக இலங்கை அரசாங்கம் பலமான அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்பை நிறுவியுள்ளதுடன், அந்த நிறுவனம் தற்போது மிகவும் வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுகிறது" என்றார்.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை ஊடாக பயங்கரவாத அமைப்புகளுக்கும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் பெருமளவு நிதி கிடைப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பயங்கரவாதத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் என்ற வகையில் பணச்சலவையை தடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நன்றாக இனங்கண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், பணச்சலவை தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்பாடுகள், சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு அமைவாக அவற்றை உரியவாறு அமுல்படுத்த எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் என்ற வகையில் எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'அங்கொட லொக்காவின்' சகா பொலிஸாரால் நேற்றுக்கைது

(கொழும்பு)

அங்கொட - உடுமுல்லை பகுதியிலுள்ள வாகன விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவரின் காரியாலயமாக பயன்படுத்தப்பட்ட வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை தொடர்பில் அங்கொட லொக்கா எனும் பாதாள உலக தலைவனின் நெருங்கிய சகா் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். மிரிஹான விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். 26 வயதான அங்கொடை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கப்பம் செலுத்தாமை தொடர்பில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. இதன் போது யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத போதும் குறித்த காரியாலயத்துக்கு சேதம் ஏற்பட்டது.

அங்கொட லொக்காவுக்காக குறித்த வர்த்தகரிடம் 25 இலட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டு அது 5 இலட்சம் ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது. அந்த கப்பத் தொகை செலுத்தப்படாததன் விளைவாகவே இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1136

Search for people, places and things | Nagendram Home

கலையினி




நிர்மலன்




வனிதா




சுகந்தினி




விசாகன்




அபிநயா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2017-16.08.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும்



சோதனையிலும் சாதனை நிகழ்த்திக் காட்டும் சிம்ம இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு யோகாதிபதி செவ்வாயும், தன லாபாதிபதி புதனும் இருக்கின்றனர். எனவே விரயங்கள் கூடுதலாக இருக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற நீங்கள் இந்த மாதத்தை இனிய மாதமாக மாற்றிக் கொள்வீர்கள்.

சொந்தக் கருத்துகளை செயற்படுத்திய நீங்கள், இந்த மாதத்தில் அடுத்தவர்களின் ஆலோசனைகளையும் கேட்டு நடக்க நேரிடலாம். 'சேமிப்பு கரைகிறதே' என்று கவலைப்படுவீர்கள். ஜென்மத்தில் இராகு இருப்பதால் மன அமைதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும். மாற்றங்கள் வருவதை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீரகள்.

குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் மந்த நிலை உருவாகும். அர்த்தாஷ்டமச் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்திணைவர். கடந்த 2 வருடங்களாக 4இல் சனி சஞ்சரிக்கும் காலத்தில், நண்பர்களில் ஒருசிலர் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ளமாட்டார்கள்.

அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது வக்ரச் சனியின் ஆதிக்கத்தாலும், இராகு கேதுக்களின் பெயர்ச்சியின் காரணமாகவும் மனமாற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கப் போகிறார்கள். இம்மாதம் இராகு கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. ஜென்ம ராகுவும், சப்தம கேதுவும் மாற்றம் பெறும் பொழுது, ஏற்றங்களும் இனிய பலன்களும் வந்து சேரும். பயண ஸ்தானத்தில் இராகு சஞ்சரிக்கப்போகிறார். இதுவரை கேட்டும் கிடைக்காத இடமாற்றம், இனி கேட்காமலேயே கிடைக்கலாம். 6இல் வரும் கேது மறைமுக எதிர்ப்புகளை கொடுத்தாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத்தில் மட்டும் அப்போதைக்கப்போது அச்சுறுத்தல் உருவாகும். இந்தப் பாம்புக் கிரகங்களின் ஆதிக்கம் குறைய, பெயர்ச்சியான பிறகு ஒரு மாதத்திற்குள் முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது.

**சிம்ம புதனும் வக்ர புதனும்!**

ஜூலை 22ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் செல்கிறார். தன லாபாதிபதியாக விளங்கும் புதன் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது தனவிருத்தி அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். வாகன யோகம் உண்டு.

சான்றோர்களின் சந்திப்பால் தகுந்த பலன் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஜூலை 30ஆம் திகதி சிம்மத்திலும் ஓகஸ்ட் 6ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். இக்காலத்தில் குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கலக்கங்கள் மேலோங்கும். கட்டடப் பணிகள் பாதியிலேயே நிற்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வில் வெளி வரலாமா? என்று சிந்திப்பர்.




**இராகு-கேது மாற்றங்கள்!**

ஜூலை 27ஆம் திகதி கடகத்திற்கு இராகுவும் மகரத்திற்கு கேதுவும் செல்கிறார்கள். இந்த சர்ப்ப கிரகத்தின் மாற்றங்கள் நன்மையையே உங்களுக்கு வழங்கும். இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த இராகு சிரமங்களையும் சிக்கல்களையும் உருவாக்கி இருக்கலாம். ஆரோக்கியத் தொல்லையும் வந்திருக்கலாம். அவற்றில் இருந்தெல்லாம் விடுபடும் சூழ்நிலை இப்பொழுது உருவாகும்.

ஜீவன ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் எதிர்பார்ப்புகளைச் சமாளிக்கும் சூழ்நிலை ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. கடன்சுமை குறைய, சொத்துகளை விற்க நேரிடலாம். ஆன்மீகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

அர்த்தாஷ்டமச் சனி வக்ர நிவர்த்தியாகும் பொழுது, பலம் கூடுகிறது. எனவே ஓகஸ்ட் 4ஆம் திகதிக்கு மேல் எதிலும் கூடுதல் கவனம் தேவை. திடீர் பிரச்சினைகள் உருவாகலாம். குடும்பச் சுமை கூடும். உறவினர்களாலும் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஜென்ம ராகு மாறும் வரை விரயங்கள் கூடுதலாகத்தான் இருக்கும். வீட்டில் உள்ளவர்களால் பிரச்சினைகள் தலை தூக்கலாம். இருப்பினும் சமாதானமாகச் செல்லுங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உடன் இருப்பவர்களால் ஒற்றுமை குறைவு ஏற்படலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் வந்துசேரும்.

பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகாமல் இருக்க அனுசரித்துச் செல்வதே நல்லது. சுபவிரயங்கள் அதிகரிக்கும். இராகு- கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நலம் யாவும் வந்து சேரும்.

## தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்



ஆலோசனைகளை அள்ளி வழங் கும் கன்னி இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் குரு பகவான் வீற்றிருக்கிறார். அவரது அருட்பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். பிரபலங்களின் ஒத்துழைப்போடு பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

இராசிநாதன் புதன் விரயாதிபதி சூரியனுடனும், சகோதர ஸ்தானாதிபதி செவ்வாயுடனும் கூடி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் கொஞ்சம் அதிகமாகும். இருப்பினும் விரயத்திற்கேற்ற வரவும் வந்து சேரும். சகோதரருக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை ஏற்படலாம்.

அதே நேரத்தில் இராகு- கேதுக்களின் பெயர்ச்சியும் இந்த மாதத்தில் நிகழவிருக்கிறது. இராகு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பாம்பு கிரகங்களின் பெயர்ச்சிக்குப் பின்னர், பண மழையில் நனையும் வாய்ப்பு உண்டு. மனம் மகிழும் விதத்தில் இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும்.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் கேது, பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கி வைக்கலாம். ஒரு சிலருக்கு கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பு உருவாகும். இராகு- கேதுக்கள் மேலும் நன்மை தர, மிகுந்த பொருளாதார யோகம் வர, பெயர்ச்சிக்குப் பிறகு அனுகூல நாள் பார்த்து சர்ப்பசாந்திப் பரிகாரம் செய்வது நல்லது.

இம்மாதம் சுக்ர பலம் உங்களுக்கு நன்றாக இருக்கிறது. 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், சொந்த வீட்டில் இருக்கும் பொழுது ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆடி வெள்ளி தோறும் விரதம் இருந்து அம்பிகையை நாடிச் சென்று வழிபட்டு வந்தால், தேடிவரும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**சிம்ம புதனும் வக்ர புதனும்!**

உங்கள் இராசிநாதன் புதன் ஜூலை 22ஆம் திகதி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். சிம்ம இராசி உங்களுக்கு விரயங்களைத் தரும் ஸ்தானமாகும். அந்த இடத்திற்கு புதன் வரும்பொழுது, விரயங்கள் அதிகரிக்கும், குடும்பச் சுமை கூடும். தொழில் ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். வைத்திருக்கும் தொழிலைக் கொடுத்துவிட்டு வெளியூர், வெளிநாடு செல்லலாமா? என்று யோசிப் பீர்கள்.

ஜூலை 30ஆம் திகதி சிம்மத்திலும், ஓகஸ்ட் 6ஆம் திகதி கடகத்திலும் புதன் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ரம்




அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் அதிகரிக்கும். ஒரு காரியத்தை ஒருமுறைக்கு இரு முறை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**இராகு- கேது பெயர்ச்சிக் காலம்!**

ஜூலை 27ஆம் திகதி கடகத்தில் இராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். லாபஸ்தானத்தில் இராகுவும், புத்ர ஸ்தானத்தில் கேதுவும் வருவதால் இலாபம் திருப்திகரமாக இருக்கும். தொழில் வளர்ச்சி கூடும். மாற்றினத்தவர்களின் ஆதரவால் மகத்தான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். அவர்களின் பட்ட மேற்படிப்பை வெளிநாடு சென்று படிக்க விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்ய முன்வருவீர் கள். சுபவிரயங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் நடைபெறும் நேரம் இது.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக பங்காளிப் பகை மாறும். பகல் -இரவாக பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிட்டும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். புதிய வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கும். வருமானத்திற்கு வழிவகுக்க நண்பர்கள் முன்வருவர். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஜென்ம குருவின் ஆதிக்கத்தால் ஒரு சிலருக்கு இடமாற்றம், வீடு மாற்றம் அமையலாம். ஒரு சிலர் சொந்த வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு, வாடகை வீட்டில் குடியிருக்க நேரலாம். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. பெண் குழந்தைகளின் வழியே சுபகாரியப் பேச்சுகள் நடைபெறலாம். தாயின் உடல்நலம் சீராகும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வந்து சேரலாம். செவ்வாய் தோறும் துர்க்கையை வழிபடுவது நல்லது. ஆடி வெள்ளியில் அம்பிகையை வழிபட்டுவந்தால் நாடி வந்த துயரங்கள் விலகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து தரப்பினரிடையேயும் நல்லிணக்க மனோநிலை ஏற்படுமானால் தீர்வு கிடைக்கும்

## பிரதியமைச்சர் அமீர் அலி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாணவர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் மதப் பிரமுகர்கள் என எல்லாத் தரப்பினரிடையேயும் நல்லிணக்கம் தொடர்பான மனோநிலை ஏற்படுமாக இருந்தால் மாத்திரமே இந்நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.**

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான எண்ணக்கருவை இலங்கையின் சமயம்சார் பாடசாலைக் கல்வி முறைமையினுள் நிறுவகப்படுத்தல் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு - தன்னாமுனை மியானி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மனிதநேயம் என்பது எல்லோருக்கும் இருக்கின்றது.

கடந்த காலங்களில் நமது மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் சுனாமி அனர்த்தம் உட்பட ஏனைய அனர்த்தங்கள் ஏற்பட்ட போது பெரும்பான்மைச் சமூகத்தினர் உதவிகளைச் செய்தனர்.

அதேபோன்று தென்னிலங்கை மக்களுக்காக சிறுபான்மை சமூகத்தினர் பதிலுக்கு உதவி செய்தனர்.

இதுவே மனிதாபினமாகும். மனிதாபிமானம் இருப்பதால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென்பது மிகவும் இலகுவான காரியமாகும்.

இலங்கையில் நல்லிணக்கத்துக் கான வேலை திட்டங்களுக்காக நிதி செலவு செய்யப்படுகிறது.

இந்நிலைமை வேறு நாடுகளில் கிடையாது. நாம் எப்படியாவது வாழ்ந்து விட்டுச் செல்லமுடியம்.

ஆனால் எங்களுடைய எதிர்காலச் சந்ததியினர் வாழ முடியாத நிலைமை ஏற்படும்.

பெரும்பான்மைச் சமயத் தலைவர்களிடம் எங்களைப் பற்றிப் பிழையாகக் கூறப்பட்டுள்ள அல்லது அவர்கள் பிழையாக எண்ணிக் கொண்டிருக்கின்ற விடயங்களையே அவர்கள் மீள மீளப் பேசு கின்றார்கள்.

சிறுபான்மைச் சமூகமான நாங்கள் எங்களின் பிரச்சினைகள் நாங்கள் செய்கின்ற விடயங்கள் பற்றி அவர்களிடம் தெளிவாக எடுத்துக்கூறி அவர்களிடமுள்ள சந்தேகங்களைக் களைய வேண்டும்.

இந்த விடயத்தில் நாம் அனைவரும் தவறு விட்டிருக்கின்றோம். அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிபர், அரசாங்க அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் ஒன்றிணைந்து நல்லிணக்கத்துக்கான வேலைத் திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறுவோமாக இருந்தால் நாம் பலதரப்பட்ட பிளவுகளைச் சந்திக்க வேண்டியேற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டவரைபு அடுத்த வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்- ஜனாதிபதி தகவல்

(கொழும்பு)


உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. குறித்த ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்காக அந்த் சட்ட வரைபு அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்புக்கான உள்ளூராட்சி நிறுவன திட்டத்தை தயாரிப்பதற்காக நேற்று முன்தினம் இலங்கை மன்றத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தேர்தலை நடத்தவில்லை என அரசியல் ரீதியிலும், ஊடகங்களிலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், உண்மையில் அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இருக்கவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தல் தொடர்பில் முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த சட்டத்திலுள்ள முறைகேடுகள் மற்றும் ஒழுங்கற்ற தன்மை காரணமாகவே தேர்தலை நடத்த முடியாத நிலை உருவானதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பில் இதுவரை எந்தவொரு அரசாங்கமும் நிரந்தரமான விஞ்ஞானபூர்வமான திட்டத்தை அமுல்படுத்தவில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசியல் ரீதியான குறுகிய மனப்பாங்கின்றி மனச்சாட்சிக்கமைய சிந்திக்கும் அனைவரும் அதனை ஏற்றுக் கொள்வதாகவும், இனிவரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கமும் முகம்கொடுக்க தேவையற்ற விதத்தில் நாட்டின் கழிவு பிரச்சினையை நிறைவு செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# பிக்பாஸ்;காயத்திரியின் கருத்துக்கு அமைச்சர் மனோ கணேசன் பதிலடி



தென்னிந்தியாவில் மட்டுமல்ல தமிழர்வாழும் நாடுகளிளெல்லாம் சமகாலத்தில் மிகவும் பரபரப்பாக பேசப்படும் நிகழ்ச்சிதான் பிக்பாஸ். விஜய்தொலைக்காட்சியில் இந் நிகழ்ச்சி ஒளிபரப்பாகின்றது. இதை நடிகர் கமல் ஹாசன் தொகுத்து வழங்குவதால் பட்டிதொட்டியெங்கும் அது ஹிட்டாகியுள்ளது. பிக்பாஸ் வீட்டிலிருந்து இன்று யார்வெளியே போவது, நாளை யார் போவது என்பது உட்பட பரபரப்புக்கு பஞ்சமில்லாத வகையில் அதன் ஓட்டம் அமைந்துள்ளது. இந்நிலையில், பிக்பாஸ் நிகழ்ச்சியை அமைச்சர் மனோகணேசனும் தொடர்ந்து பார்த்து வருகிறார் என அவருக்கு நெருக்கமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் தனது முகநூலில் அவர் பதிவொன்றை இட்டுள்ளார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் நடன இயக்குநர் காயத்திரி ரகுராம் வெளியிட்ட கருத்தொன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த வசனத்தையும் கொழும்பு அரசியலையும் தொடர்புபடுத்தி ஒருவர் இட்டுள்ள பதிவை மனோ பகிர்ந்துள்ளார்.

அந்த பதிவு வருமாறு, சேரி பிகேவியர்' என்று சொல்வது என்ன ஒரு பிகேவியர்? அடடா! என்ன ஒரு வார்த்தையாடல்?

இங்கே இலங்கை கொழும்பு மாநகரில் எனக்கு வாக்களித்து என்னை இந்நாட்டில் மத்திய அமைச்சராக்கிய வாக்காளர்களில் பெரும்பான்மையோர் இந்நகரில்வாழும் சேரி பிகேவியர்காரர்கள் என்று சொல்வதில் எனக்கு பெருமை.எமது தமிழுறவின் பெருமையின் முன் நடிகை காயத்ரி ரகுராம் தலை குனிய வேண்டாமா? என அந்த [illegible] (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:24 உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L
சுவீடன் NOT PR
தொ.இ: B/7577

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: சதயம்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/7578

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம் சூரிசெவ் 10இல்
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/7580

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 31செவ் 4 இல்
உயரம்: 5’10"
தகைமை/தொழில்:BSc, MSc/ தனியார் தொழில்
தொ.இ: B/7581

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 59 செவ் 8 இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/6662

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 19 உயரம்: 5’8"
தகைமை/தொழில்: CIMA
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6663

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 8 உயரம்: 5’3"
தகைமை/தொழில்: BA, ஆயுள்வேதம்
தொ.இ: G/6665

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 56 உயரம்: 5’5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6666

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கடவுளிடம் ஒரு பேட்டி

ஒரு நாள் கடவுளை பேட்டியெடுப்பதாய் கனவு வந்தது அவனுக்கு.

"உள்ளே வா" என்று அழைத்த கடவுள் "என்னைப் பேட்டியெடுக்கணுமா?"

"ஆமாம்- உங்களுக்கு நேரமிருந்தால் கொடுங்கள்" - இது அவன்.

கடவுள் சிரித்தார்.

"என் நேரம் முடிவற்றது. எதையும் செய்யப் போதுமானது. சரி என்ன கேட்கப் போகிறாய்?"

"மனித இனத்தில் உங்களை ஆச்சர்யப்படுத்துவது எது?"

கடவுள் சொன்னார்...

"மனிதன் ரொம்ப நாள் குழந்தையா இருக்கப் பிடிக்காமல், சீக்கிரம் வளர்ந்து பெரியவனாகிறான். ஆனால் வளர்ந்த பிறகு குழந்தையாகவே நீண்ட காலம் இருக்கிறான்.

பணத்துக்காக உடல் நலனை இழக்கிறான். பின்னர் இழந்த நலத்தைத் திரும்பப் பெற எல்லாப் பணத்தையும் இழக்கிறான்.

எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் கவலையுடன் யோசிப்பதில், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்காலத்தை மறந்து விடுகிறான். நிகழ்காலமும் எதிர்காலமும் அவனுக்கு இல்லாமலே போகிறது!

சாகாமல் இருக்க வாழ்கிறான். ஆனால் வாழாமலே சாகிறான்"

கடவுளின் கைகள் லேசாக அசைந்தன. சில நொடிகள் மௌனம்.

"ஒரு தந்தையாக, இந்த பூமியில் உள்ள உங்களின் பிள்ளைகளுக்கு சொல்ல விரும்பும் வாழ்க்கைப் பாடம் என்ன?"

-மீண்டும் கேட்டான்.

கடவுளிடமிருந்து ஒரு புன்னகை.

"கண்ணா யாரும் தன்னை நேசிக்க வேண்டும் என்று வலுவில் முயற்சிக்காதே. நேசிக்கப்படும் அளவு நடந்து கொள்.

வாழ்க்கையில் ஒருத்தன் சம்பாதிச்சது மதிப்புள்ளதல்ல, அதை எப்படிச் சம்பாதிச்சான் என்பதில்தான் அந்த மதிப்பிருக்கு.

உன்னைவிட ஒன்று சிறந்ததென்று ஒப்பிடுவதே கூடாது.

எல்லாம் இருக்கிறவன் பணக்காரனென்று நினைக்காதே. உண்மையில் யாருக்குத் தேவை குறைவோ அவன்தான் பணக்காரன்!

நாம் நேசிக்கும் ஒருத்தரை புண்படுத்த சில நொடிகள் போதும். ஆனால் அதை ஆற்ற பல ஆண்டுகள் ஆகும்.



நம்மை நேசிக்கும் பலருக்கு அதை சரியாக வெளிப்படுத்தத் தெரியாமல் இருப்பது தான் நிஜம்.

பணம் இருந்தா எல்லாத்தையும் வாங்க முடியுமென்று நினைக்கிறது தப்பு. சந்தோசத்தை ஒருபோதும் வாங்க முடியாது.

இரண்டு பேர் ஒரே விடயத்தைப் பார்த்தாலும் அவர்கள் பார்க்கும் விதம் வேறு வேறாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்.

ஒரு நல்ல நண்பனுக்கு அடையாளம், சக நண்பனைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருப்பதும். எந்தச் சூழ லிலும் அவனை விரும் புவ துமே!

அடுத்தவனை மன்னிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது, தன்னைத் தானே மன்னித்துக் கொள்ளும் தன்மை வேண்டும்.

நீ சொன்னதை மற்றவர் மறக்கலாம். நீ செய்ததையும் மறந்து போகலாம். ஆனால், உன்னால் அவர்கள் பெற்ற உணர்வை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்!"

பேட்டி முடிந்தது என்று சொல் லும் விதமாக கண்களால் சிரித்தார் கடவுள். அவரது கதவுகள் மூடின தேவையானது கிடைத்த சந்தோஷ த்துடன் விழித்தெழுந்தான் அவன்!

## 07.2017 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1545-இங்கிலாந்தின் "மேரி றோஸ்" என்ற போர்க்கப்பல் போர்ட்ஸ்மவுத்" என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.
- 1553-9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன் கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடி சூடினாள்.
- 1870-பிரான்ஸ் புரூசியா மீது போரை ஆரம்பித்தது.
- 1900 - பாரிசில் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை ஆரம்பமாயிற்று.
- 1912-அரிசோனா மாநிலத்தில் 190 கிகி எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்து கிட்டத்தட்ட 16,000 துகள்களாகச் சிதறுண்டது.
- 1940-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947 - பர்மிய தேசியவாதியான ஓங்சான் மற்றும் அவரது 6 அமைச்சர்கள் கொல்லப்பட்டனர்.
- 1967 - வட கரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டினீஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.
- 1980-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாயின.
- 1985 - இத்தாலியில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996-ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாயின.
- 1996-ஓயாத அலைகள் ஒன்று முல்லைத்தீவில் இலங்கைக் கடற்படையின் ரணவிரு பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. ஏழு கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

பிறப்புகள்

- 810 - முகம்மது அல்-புகாரி, பாரசீகக் கல்வியாளர் (இ. 870)
- 1827-மங்கள் பாண்டே.இந்திய சிப்பாய்(இ. 1857)
- 1894-கவாஜா நசிமுத்தீன், 2ஆவது பாகிஸ்தான் பிரதமர் (இ. 1965)
- 1921 - ரோசலின் யாலோ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (இ. 2011)
- 1938 - ஜயந்த் நாரளீக்கர், இந்திய வானியலாளர், வானியற்பியலாளர்
- 1948 -ஓக்ரம் இபோபி சிங், மணிப்பூர் அரசியல்வாதி
- 1948 - அல்தமஸ் கபீர், இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி
- 1955 - ரோஜர் பின்னி, இந்தியத் துடுப்பாளர்
- 1961 - காம்ப்பெல் ஸ்காட், அமெரிக்க நடிகர், இயக்குநர்
- 1979 - மாளவிகா, இந்தியத் திரைப்பட நடிகை
- 1979 - தில்லார பர்னாண்டோ, இலங்கைத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1814 - மேத்தியூ பிலிண்டர்சு, ஆங்கிலேய மாலுமி (பி. 1774)
- 1947 - ஆங் சான், பர்மிய அரசியல்வாதி (பி. 1915)
- 1947 - சுவாமி விபுலாநந்தர், தமிழிசை ஆய்வா ளர் (பி. 1892)
- 1987 - ஆதவன், தமிழக எழுத்தாளர் (பி. 1942)
- 2010 - டேவிட் வாரன், அவுஸ்திரேலிய அறிவியலாளர் (பி. 1925)
- 2013 - சைமன் பிமேந்தா, கர்தினால் (பி. 1920)

சிறப்பு நாள்

- மியன்மார் - பர்மிய மாவீரர் நாள்
- நிக்கரகுவா - தேசிய விடுதலை நாள் (1979)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 100 | 100 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 | 300 | 300 | 200 |
| தக்காளி | 140 | 200 | 110 | 150 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கோவா | 120 | 200 | 80 | 150 | 120 | 130 |
| கரட் | 150 | 300 | 200 | 200 | 240 | 240 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 | 120 | 100 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 60 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 250 | 250 | 200 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 140 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 100 | 120 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 130 | 140 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 100 | 80 | 160 |
| லீக்ஸ் | 100 | 140 | 80 | 120 | 120 | 160 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 80 | 80 | 60 |
| கறிமிளகாய் | 150 | 200 | 200 | 240 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 200 | 160 | 160 | 240 |
| போஞ்சி | 200 | 180 | 100 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 90 | 100 | 100 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 | 60 | 120 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 55 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 250 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 150 | — | — | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும் போது தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன்தான்.
- டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மக்களின் தலைவனாக நின்று சம்பந்தருடன் பேச வேண்டும்

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தரும் விரைவில் சந்திக்கவுள்ளதான செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அடிக்கடி கதைக்க வேண்டிய இரு தமிழ்த் தலைவர்கள் சந்திப்பதென்பதே இப்போது முக்கியமான விடயமாயிற்று. அந்தளவுக்கு நிலைமை இறுக்கமடைந்துள்ளது.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் சந்திப்பதென்பது மிகவும் முக்கியமான விடயம். இவர்கள் இருவரும் சந்திப்பது அவசியமாயினும் இந்தச் சந்திப்பு முன்னைய சந்திப்பு போல இருக்கக்கூடாது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது இனிமேல் இடம்பெறப்போகும் சந்திப்புக்கு முன்னரும் இரண்டொரு சந்திப்புக்கள் நடைபெற்றன.

ஆனால் அந்தச் சந்திப்பின் மூலம் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சருக்கு இருந்த நெருக்கடிகள் எதுவும் அகற்றப்படவில்லை.

அந்த நெருக்கடிகளை நீக்கவேண்டுமென சம்பந்தர் நினைக்கவில்லையா? அல்லது சம்பந்தர் நினைத்தாராயினும் அவரால் அதனைத் செய்ய முடியவில்லையா? என்பது புரியவில்லை.

பொதுவில் வடக்கு மாகாண சபையின் இயங்கு நிலைக்கு சபை உறுப்பினர்கள் சிலர் மிகப்பெரும் தடையாக இருந்தனர் – இருக்கின்றனர்.

இதுபற்றி இரா.சம்பந்தர் அறிந்து வைத்திருந்த போதிலும் அதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே, முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரங்கேறியது.

இந்த அரங்கேற்றத்துக்கு சம்பந்தரும் உடன்பட்டார் என்று கூறுவதை அடிப்படையில் நிராகரித்துவிட முடியாது.

எனினும் தமிழ் மக்களின் பேராதரவுடன் முதலமைச்சரின் பதவி பாதுகாக்கப்பட்டது.

ஆக, இப்போது வடக்கின் முதலமைச்சராக இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்ந்த முதலமைச்சர் அல்ல என்பது நிரூபணமாகிறது.

ஆகையால், முதலமைச்சருக்கும் இரா.சம்பந்தருக்கும் இடையில் நடைபெறும் சந்திப்பு என்பது பல விடயங்களுக்கு தீர்வு காண்பதாக இருக்க வேண்டும்.

சம்பந்தரால் அழைத்து வரப்பட்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் 14.06.2017 அன்று இரவு 8 மணியளவில் ஆளுநர் கூரேயிடம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கையளிக்கப்பட்டதோடு அந்தப் பதவியில் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டார்.

இப்போது வடக்கின் முதலமைச்சராக இருக்கும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தமிழ் மக்கள் தங்கள் தலைவனாக ஏற்று பேரணியாக வந்து அவரை முதலமைச்சராக பிரகடனம் செய்து வைத்துள்ளனர்.

எனவே 14.06.2017க்கு முந்திய வடக்கின் முதலமைச்சர் வேறு. இப்போது இருக்கின்ற முதலமைச்சர் வேறு.

ஆகையால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தருடன் சந்திக்கும் போது ஆணித்தரமாக பேச வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.

# ஆரம்பமான அன்றே எதிர்க்கட்சிகள் அமளி

## மக்களவை நாள்முழுவதும் ஒத்திவைப்பு

(டில்லி)

விவசாயிகள் பிரச்சினை, குண்டர்கள் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களை எழுப்பி எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்திய பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளான நேற்று முன்தினம் மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவித்து இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் அவையை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் பல்வேறு முறை ஒத்தி வைத்தார்.

இருப்பினும், மக்களவையில் விவசாயிகள் பிரச்சினை, குண்டர்கள் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பி தொடர் அமளியில் ஈடுபட்டதால் அவை இன்று முற்பகல் 11 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (இ-3)

# தென்பகுதி மீனவர்களின் படகு மோதி உள்ளூர் மீனவரின் படகுக்குச் சேதம்

(கரணவாய்)

தென்னிலங்கை மீனவர்களின் படகு மோதியதில் உள்ளூர் மீனவர் ஒருவரின் படகு சேதமடைந்ததுடன் அதில் சென்ற மீனவர் ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மணற்காட்டு பகுதியைச் சேர்ந்த வின்சன் கிறிஸ்ரி தாஸ்(வயது -27) என்ற மீனவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மீன் பிடிப்பதற்காக சென்றுள்ளார். இரவு 9.30 மணியளவில் நாகர் கோவில் கடற்பரப்பில் கரையில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில் வெளிச்சமின்றி வந்த தென்னிலங்கை மீனவர்களின் படகு மோதியது.

இதில் மீனவரின் படகு முன்பகுதி சேதமடைந்ததுடன் தலைப் பகுதியில் படகு அடித்ததனால் பாதிக்கப்பட்ட மீனவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து நேற்று அப் பகுதியில் பயணித்த தென்னிலங்கை மீனவர்கள் இரண்டு படகுகளை மடக்கிப் பிடித்து அதிலிருந்த ஆறு மீனவர் களினையும் பிடித்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (இ-60)

# “கந்தபுராண வசனம்” நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கந்தபுராண வசனம். நூல் வெளியீடு இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-3-102)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, குமுழமுனை, முழங்காவில், நாச்சிகுடா, வெள்ளாங்குளம், முழங்காவில் கடற்படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, வெள்ளாங்குளம் 651ம் பிரிகேட் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (9)

# மூன்று பிரதேச செயலர்கள் இன்று நீதிபதியுடன் சந்திப்பு

வடமராட்சியின் மூன்று பிரதேச செயலாளர்களும் இணைந்து இன்று புதன் கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவன் பலியானார்.

அதன் பிற்பாடு பொலிஸாரின் நடவடிக்கைகள் பொலிஸ் நிலையத்தில் மட்டுப் படுத்தப்பட்டிருந்த நிலையில் சட்டவிரோதமான முறையில் ஆறு நாட்களாக தொடர்ந்து மணல் அகழ்வு இடம் பெற்று வந்தது. இந் நிலையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியை இன்றைய தினம் வடமராட்சியின் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலாளர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வைதீக திருமணத்தில் காசி யாத்திரையின் விளக்கம் என்ன?**

வர்ணாசிரமப்படி பிரமச்சரியம் 48 ஆண்டுகள் கடைப்பிடித்த ஒருவருக்கு கிருகஸ்தம் என்னும் திருமணம் நடத்த வேண்டும். இந்தக் காலத்தில் யாரும் 48 ஆண்டுகள் வரை பிரம்மச்சரியத்தை கடைபபிடிப்பது இல்லை. 48 ஆண்டுகள் கடந்தவரை எந்தப் பெண்ணும் மணக்க முன்வருவதில்லை.

பழைமையான வர்ணாசிரம சாஸ்திரம் மறைந்து விடக்கூடாது என்பதற்காக பிரம்மச்சர்யம் தான் வேண்டும் என்று காசிக்கு செல்பவரை வழிமறித்து பெண் கொடுக்கும் நிகழ்ச்சி காசி யாத்திரை நிகழ்ச்சியாக கொண்டாடப்படுகிறது. (தொடரும்)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பக்தியின் பக்கம் மனம்



✦ முதலில் உன்னை நீ அறிந்து கொள். அதன்பின், கடவுளை அறியலாம்.

✦ கடவுளின் கருணை என்னும் காற்றானது, எப்போதும் உன் பக்கம் வீசிக் கொண்டு தான் இருக்கிறது.

✦ தீவிர அன்பு இருக்குமானால், உனக்கு கடவுளின் தரிசனம் கிடைப்பது உறுதி. எங்கும் அன்பு, எதிலும் அன்பாயிரு.

✦ தனிமையில் இருக்கும் போதும் மனதால் கூட பாவச்செயலில் ஈடுபடாத மனிதனே தர்மவான்.

✦ மனதை பக்தியின் பக்கம் திருப்பு. ஆனால், மூடத்தனத்திற்கு சிறிதும் இடம் அளிக்காதே.




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

இதற்கு கைமாறாக என் பக்தர்களை இம்மலைக்கு வரும்படி செய்வேன். அவர்கள் முதலில் உங்களைத் தரிசித்து உங்களுக்கு நைவேத்யம் காணிக்கை செலுத்திவிட்டு அதன்பின் என்னைப் பார்க்க வருமாறு செய்கிறேன். இந்த நிலையில் இதைத்தவிர வேறு எதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன் என்று தாழ்மையுடன் சொன்னான் சுந்தரராஜன்.

வராஹமூர்த்தி இணங்கினார். தன் ஆசிரமத்தை அடுத்துத் தங்கிக்கொள்ள அழகரசனுக்கு அனுமதி அளித்தார். கொஞ்சம் யோசித்து கூடவே இன்னொரு சேதியும் சொன்னார்.

கோபாலா வகுளாதேவி என்னும் சிறந்த பக்தை எனக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கிறாள். உனக்கு அவளை அறிமுகப்படுத்துகிறேன். ஆதரவற்றிருக்கும் உன்னை அவளே இனி கவனித்துக் கொள்ளட்டும். (தொடரும்)

# நோயற்ற நீண்ட ஆயுள் பெற்றிட

சீனி, உப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றின் பாவனையை குறைத்திடுவோம்.

தினமும் இரண்டு வகை மரக்கறிகள், பச்சைக் கீரை வகை என்பவற்றை சேர்த்திடுவோம்.

பழவகைகளில் இரண்டை எடுத்திடுவோம்.

தினமும் 2 லீற்றர் வரையான சுத்தமான கொதித்தாறிய நீரைப் பருகிடுவோம்.

தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்திடுவோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு வதிரி டயமன்ஸ் தகுதி





நவிண்டில் கலைமதி வி. கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியிலாக நடத்தி வருகின்ற 11 நபர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17.07.2017 அன்று நடைபெற்ற இரண்டாவது மின்னொளியிலான அரைஇறுதி ஆட்டத்தில் டயமன்ஸ் வி.கழத்தை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் வி.க. மோதியது.

முதல் பாதியாட்டத்தில் 7 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் பிறேம்குமார் (பீமர்) நீண்ட தூரத்திலிருந்து தலையால் முட்டி கோல் போட்டார். தொடர்ந்து ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணி கோல்போடும் வாய்ப்புக்களை டயமன்ஸ் பின்களம் தடுத்தாட முதல் பாதியாட்டத்தை டயமன்ஸ் அணி 1:00 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் டயமன்ஸ் அணி ஆதிக்கம் இருந்தது. குறிஞ்சிக்குமரன் அணி ஆட்டத்தின் மாற்றத்திற்கு போராட வேண்டியிருந்த சந்தர்ப்பத்தில் டயமன்ஸ் அணியின் வளர்ந்து வரும் நம்பிக்கை நட்சத்திரம் துஷிகரனால் அணியின் இரண்டாவது வெற்றிக் கோல் 44 ஆவது நிமிடத்தில் பதியப்பட்டது. இறுதி ஆட்ட நேர முடிவில் 2:00 என்ற ரீதியில் குறிஞ்சிக்குமரன் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதியானது வதிரி டயமன்ஸ் அணி. டயமன்ஸ் அணி சார்பாக பிறேம்குமார்-01, துஷிகரன் -01 கோல் போட்டனர்.

ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் பிறேம்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதி போட்டியில் ஊரெழு றோயல் அணியை வதிரி டயமன்ஸ் அணி சந்திக்கவுள்ளதால் இறுதி போட்டி ரசிகர்களுக்கு விருந்தளிக்கும். (க)

# சரஸ்வதி வி.கழகத்தின் கரப்பந்தாட்ட முடிபுகள்

கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட தொடரில் 15.07.2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டு கழகம் மோதவிருந்தது.

கைதடி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நேரம் தாமதமாக சமுகமளித்ததனால் சீமா விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்துசிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்க ழகம் 25:23, 19:25, 25:14 ஆகிய புள்ளிகளால் 2:1 என் றடிப் படையில் வெற்றி பெற் றது.

மூன்றாவது போட்டியில் நீர்வேலி காமாட்சி அம்பாள் (A) விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மீசாலை சீமா காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் 25:24, 21:25, 25:17 ஆகிய புள்ளிகளினால் 2:1 என்றடிப்படையில் வெற்றியை தனதாக்கியது.

16.07.2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகம் மோதவிருந்தது. மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் சமுகமளிக்காததனால் கெருடாவில் அண்ணா விளையாட்டு கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்து இளைஞர் B விளையாட்டுக்கழகம், பாரதி B விளையாட்டுக்கழகம் ஆகியன போட்டியிட்டன.

இதில் இந்து இளைஞர் B விளையாட்டுக்கழகம் 25:17, 25:20 ஆகிய புள்ளிகளால் 2:0 என்றடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் ஆகியன போட்டியிட்டன. இதில் புத்தூர் சரஸ்வதி 22:25, 22:25, 28:26 ஆகிய புள்ளிகளினால் 2:1 என்றடிப்படையில் வெற்றியை பதிவு செய்தது. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III யாழ். பல்கலை. இறுதிக்கு தகுதி



யாழ்.பல்கலைக்கழக அணி யாழ். நகரில் இறுதிப் போட்டிக்கும் அகில இலங்கை ரீதியாக இரண்டாவது சுற்று க்கும் தகுதி பெற்றுள்ளது.

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III தொடரின் 2ஆவது அரையிறுதியாட்டம் 16.07.2017 அன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி, யாழ். ஜொனியன்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று யாழ். நகரில் இறுதியாட்டத்திற்கும் அகில இலங்கை ரீதி யாக 2 ஆவது சுற்றுக்கும் தகுதி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 38.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. ஹரிபிரவீன்-13, லவேந்திரா-35, நிலோஜன்-13 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஜனன்தன்-02,துவாரகசீலன்-02, நிதர்ஸன்-01, செந்தூரன்- 03, குருகுல சூரியா-01,லோகதீஸ்வர்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 24.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. துவாரகசீலன்-45, குருகுல சூரியா ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பிருந்தாபன்-01, டக்ஸன், கானாமிர்தன், லவேந்திரா தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ். பல்கலைக்கழக அணி இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியுடன் எதிர்கொள்வர். அத்துடன் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றமையால் வெளிமாவட்டத்திலுள்ள ஓர் அணியுடன் போட்டியில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. (க)



தேசிய ரீதியில் அழைக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட ஹென்றீசியன் கிண்ண புட்சால் உதைபந்தாட்டத் தொடரில் யா/ இமையாணன் அ.த.க.பாடசாலை சம்பியன் ஆகி வரலாறு படைத்தது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.





அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய அணியை வீழ்த்தி கரவெட்டிப் பிரதேச செயலக அணி கிண்ணத்தை சுவீகரித்தது. (க)

## மாவட்ட ரீதியிலான கபடி

# பலாலி விண்மீன் அணி அரையிறுதிக்கு தெரிவு

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் அமரர் ம.சூரியகுமாரன் ஞாப கார்த்த 20 வயதுக்கு உட்பட்டோருக்கான யாழ்.மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான கபடிச்சுற்றுப் போட்டியில் 17.07.2017 அன்று மின்னொளியில் நடைபெற்றது.

இதில் சாவாகிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட பலாலி விண்மீன் மிகவும் நேர்த்தியான விளையாட்டின் மூலம் 47:31 என்ற புள்ளியடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

இப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாக பலாலி விண்மீன் வீரன் படையப்பா தெரிவு செய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயார் முன்னிலை...

வர்களால் கடந்த மாதம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கிளிநொச்சி நீதவானின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு குறித்த சந்தேகநபர்கள் யாழ்பாண சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு பிணை கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு நேற்றைய தினத்துக்கு திகதியிடப்பட்டிருந்ததை அடுத்து குறித்த வழக்கை பார்வையிடுவதற்காகவும் மகனை சந்திப்பதற்காகவும் மேற்குறித்த சந்தேக நபரின் தாயார் யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வந்துள்ளார்.

குறித்த வழக்கு அடுத்த மாதத்துக்கு தவணையிடப்பட்ட காரணத்தினால் மகனை சிறைச்சாலையில் சென்று பார்ப்பதற்கு தாயார் சென்றிருந்தார்.

சிறையினுள் மகனுடன் தாயார் கதைத்துக் கொண்டிருந்த போது மகனை தாயின் கண் முன்னே சிறைக்காவலாளி ஒருவர் வந்து கையை மடக்கி கன்னத்தில் அறைந்துள்ளார். தனது மகன் தாக்கப்படுவதை நேரடியாக பார்த்த தாயார், அந்த இடத்திலேயே கூச்சலிட்டு கதறி அழுதுள்ளார். அப்போது சிறையில் இருந்த ஏனைய காவலாளிகள் வந்து அதை தடுத்து குறித்த சந்தேக நபரை அழைத்துச் சென்றனர்.

தாயார் அந்த இடத்தில் இருந்து என் கண் முன்னே அடிக்கிறார்களே நான் இல்லாத நேரம் எவ்வளவு சித்திரவதை செய்வீர்கள். தனது மகன் இறுதிக்கட்ட போரின் போது ஒரு கையை இழந்தவர். அவரே தனது குடும்பத்தை பார்த்து வந்தார்

இப்போது நானும் எனது கணவரும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளோம். உதவிக்கு யாரும் இல்லை. எனது மகனை அடிக்காதீர்கள். எனது மகனை கொல்ல போகிறார்கள். இந்த இடத்தை விட்டு நான் போக மாட்டேன் என கதறி அழுதுள்ளார். அப்போது அங்கு வந்த அதிகாரி ஒருவர் குறித்த விடயம் தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து தாயாரை ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைத்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் தாயார் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (மு-9)

## சம்பந்தனுடன்...

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் நேற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். நேற்று மதியம் சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கலந்து கொண்டார். (மு-11)

## 167 மில்.டொலர்...

ரிக்க டொலரை வழங்க நாணய நிதியத்தின் நிறைவேற்றுத்துறை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1.1 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புக் கொண்டிருந்த நிலையில் இரண்டாம் கட்ட ஆய்வுகளை நடத்திய சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார நிலை குறித்து திருப்தி அடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## டைனமைட் வெடித்து...

நேற்று காலை குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தினால் மாணவர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் 6 மாணவிகளும் 2 மாணவர்களும் மயக்கமடைந்துள்ளனர். மயக்கமடைந்த மாணவர்கள் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை வளவினுள் உள்ள குப்பை மேடு ஒன்றுக்கு நெருப்பு வைத்த சந்தர்ப்பத்தில் அதில் இருந்தே குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீன்களை பிடிக்க பயன்படுத்தப்படும் "டைனமைட்" ரக வெடிபொருளே வெடித்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-250)

## விவியன் பாலகிருஷ்...

பியல் திணைக்களத்திற்கு சிங்கப்பூர் உதவ உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இன்று வருகை தரவுள்ளதுடன் அங்கு அவர் எலும்பு முறிவு சிகிச்சையை பார்வையிடவுள்ளதுடன் **லீ பவுண்டேசன் சிங்கப்பூர்** எனும் அமைப்பின் மூலம் அன்பளிப்புக்களையும் வழங்க உள்ளார்.

அத்துடன் காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கூவர் அரங்கில் இடம்பெறும் என்புமுறிவு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (மு-30)

## சம்பந்தன்-விக்னே...

தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்த பின்னர் இரண்டு தலைவர்களும் நேரில் சந்தித்துப் பேசும போது முக்கியமான தீர்மானங்கள், முடிவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருவருக்குமிடையலான சந்திப்பை ஏற்படுத்துவதில் இருவருக்கும் மிகவும் நெருக்கமானவரும் கொழும்பில் இருக்கக் கூடிய மூத்த சட்டத்தரணியான ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்து முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிய வருகிறது. (மு)

## விக்னேஸ்வர...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இன்று சந்தித்து பேசவுள்ளார்.

தனது விஜயத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் செல்லும் விவியன் பாலகிருஸ்ணன் வடமாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர் உள்ளிட்டவர்களையும் சந்தித்து பேசவுள்ளார். (மு-11)

## வட மத்தியிலும்...

ஏற்பட்டுள்ளது.

மாகாண சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட தன்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிராக சபைத் தலைவர் பி.எம்.ஆர். சிறிபால அனுமதி வழங்காதமையிட்டு சபையில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு தரப்பு உறுப்பினர்களும் மாகாண சபையின் செங்கோலை பறித்துச்செல்ல முற்பட்டபோது, செங்கோலுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சபைத் தலைவர் சபை நடவடிக்கைகளை எதிர்வரும் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவித்து விட்டு சபையிலிருந்து வெளியேற முற்பட்டார்.

இந்த நிலையில், அவரை மீண்டும் வலுக்கட்டாயமாக சபைத் தலைவர் ஆசனத்தில் அமர்த்துவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்ட பிரயத்தனம் வெற்றியளிக்கவில்லை.

இதன் பின்னர் எதிர்க்கட்சித் தரப்பினரால் பிரேரிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் டி.எம். அமரதுங்க சபைத் தலைவர் ஆசனத்தில் அமர்ந்ததுடன், எட்டு குற்றச்சாட்டுகள் அடங்கிய பி.எம்.ஆர்.சிறிபால மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபையில் எவ்வித ஆட்சேபனைகளும் இல்லாத நிலையில், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபைத் தலைவராக நியமிக்கப்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் டி.எம். அமரதுங்க சபை அமர்வை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். (மு-11)

## புகையிலை தொடர்...

செய்தல், காட்சிப்படுத்தல் என்பனவும் இன்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு 27ஆம் இலக்கம் புகையிலை மற்றும் போதைப் பொருள் தொடர்பில் தேசிய அதிகார சபை கொண்டுவந்த சட்டத்திலுள்ள புகையிலை குறித்த விடயம் கடுமையாக அமுல்படுத்தப்படுவதாக அதிகார சபையின் தலைவர் டாக்டர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில், மாவ, பாபுல், ஹான்ஸ், பாம்பரா மற்றும் குட்கா போன்ற புகையிலையுடன் தொடர்பான உற்பத்திகள் உட்பட புகையிலையுடன் காணப்படும் வெற்றிலைக் கூறு, புகையிலை சுருட்டு என்பனவும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகார சபைத் தலைவர் மேலும் கூறியுள்ளார். (மு)

## மருத்துவர்களின்...

சங்கத்துக்குப் போட்டியாக உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் மகா சபைக் கூட்டம் இன்று நண்பகல் கொழும்பு மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்துகொள்ளவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பல்துறை வைத்திய அதிகாரிகள் சங்கம் எனும் பெயரில் இயங்கிய அமைப்பையே தரப்படுத்தப்பட்ட வைத்தியர்களின் சங்கம் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் டாக்டர் நிரோஷன பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த இரு வருடங்களாக வைத்தியர்களின் தொழில் பிரச்சினைகளுக்காக முன்னிற்கவில்லையென்ற குற்றச்சாட்டை நிவர்த்தி செய்வதற்கு இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (மு)

## வித்தியா எவ்வாறு...

காலை மீள ஆரம்பிக்கப்பட்டது.

விசாரணைகள் ஆறு நாட்கள் நடைபெற்று முடிவடைந்திருக்கின்ற நிலையில் நேற்று ஏழாவது நாளாக மீளவும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றிருந்தது. இதன் போது வழக்கின் 21 ஆவது சாட்சியான ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய முன்னாள் உப பரிசோதகர் மரக்களன் இரான் மேற்படி தீர்ப்பாயத்தின் முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இதன்போது எதிர்த்தரப்பு சட்டத்தரணிகளாலும், சட்டமா அதிபர் திணைக்கள சட்டவாளர்களினாலும் குறுக்கு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கமைய சாட்சியமளித்த மேற்படி 21ஆவது சாட்சி குறுக்கு விசாரணைகளுக்கும் பதிலளித்திருந்தார். இதன்போது மன்றில் அவர் தெரிவித்ததாவது,

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றி வந்தேன். இவ்வாறானதொரு நிலையிலேயே கடந்த 14.05.2015 அன்று ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குறிகட்டுவான் பொலிஸ் காவலரணில் கடமைாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது நயினாதீவு அம்மன் ஆலயத்திற்கும், நாகதீப விகாரைக்கும் வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தேன்.

அதன் போது வீதியால் பயணித்த நபரொருவர் வந்து புங்குடுதீவு ஆலடிச் சந்தில் மக்கள் அதிகமாக நிற்பதாகவும் ஏதோ பிரச்சினை போல் தென்படுவதாகவும் குறிப்பிட்டார். அதன் பின்னர் என்னுடன் கடமையில் நின்றிருந்த பொலிஸாரையும் அழைத்துக் கொண்டு சம்பவ இடத்திற்குச் சென்றேன். நான் நின்றிருந்த இடத்திலிருந்து ஆலடிக்குச் செல்வதாயின் எட்டுக் கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும்.

அவ்வாறு நான் அங்கு சென்ற போது பெரும்பாலான பொது மக்கள் கூடியிருந்தனர். அங்கு நான் சென்ற போது ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் நின்றிருந்தனர். அங்கு சாதுவான மழைத்துாறலும் காணப்பட்டது. அந்தப் பகுதிலுள்ள பற்றைக்காடுகள் நிரம்பிய பாழடைந்த பகுதியில் அதாவது 15 மீற்றர் தூரத்தில் சடலமொன்று காணப்பட்டது.

அவ்வாறு காணப்பட்ட பெண்ணின் மர்ம உறுப்புப் பகுதிகள் துணிகளால் மூடப்பட்டு இருந்தது. அத்தோடு உடலின் ஏனைய பகுதிகளான கால்கள் இரண்டும் இரண்டு பக்கமாக அருகிலுள்ள மரத்துடன் இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. மேலும் குறித்த பெண்ணின் கைகள் இரண்டும் தலைக்கு மேல் பின்பக்கமாக வைத்துக் கட்டப்பட்டு அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தவாறு சடலம் காணப்பட்டது.

இதன் பின்னர் பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வரையில் சம்பவ இடத்திலேயே நின்றிருந்தேன். இதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் நிலைத்திற்குச் சென்று விட்டேன். இதன் பின்னர் மீளவும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழாமுடன் புங்குடுதீவிற்குச் சென்றோம்.

இதன்போது மேற்படி குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டார்கள். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆனால் இந்தக் குற்றவாளிகளில் ஒருவருடைய உறவினர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதால் இவர்களை அப்படியே குறிகட்டுவான் பொலிஸ் நிலை யத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அங்கு வந்திருந்தார். இதன் பின்னர் மேற்படி ஐந்து நபர்களிடமும் வெவ்வேறு பிரிவாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் போது பொலிஸ் நிலையத்தைச் சூழ்ந்த பொது மக்கள் கல்லுகள் பொல்லுகள் சகிதம் எம்மைத் தாக்கியதுடன் குறித்த ஐந்து பேரையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவ்வாறு பொது மக்கள் பெரும் கலவரத்தில் ஈடுபட்டிருந்ததால் அங்கு பாதுகாப்பில்லை என்பதால் மேற்படி ஐந்து பேரையும் கடல் வழியாக அங்கிருந்து காரைநகர் கடற்படை முகாமிற்கு இரவு 8.30 மணியளவில் கொண்டு வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து யாழ் தலைமை பொலிஸ் நிலையத்திற்கு மேற்படி ஐந்து பேரும் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு அந்த ஐந்து பேரையும் ஒப்படைத்துவிட்டு நான் ஊர்காவற்றுறை பொலிஸ நிலையத்திற்குச் சென்று அங்கேயே அன்று இரவு தங்கினேன். இதனைத் தொடர்ந்து மறுநாள் 18ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கட்டளைக்கமைய யாழ்.பொலிஸ் நிலைய தலைமைகத்திற்குச் சென்றேன்.

இதன்போது வடக்கு மாகாண சிரேஷ்ர பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க என்னைச் சந்திக்க வருமாறு அழைப்பதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலவலகத்திற்கு காலை எட்டு முதல் ஒன்பது மணி அளவில் நானும் அங்கு சென்றேன்.

அவ்வாறு நான் அங்கு சென்ற போது வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க, மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ் பிராந்திய சிரேஷ்ர பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருடன் சிவில் உடையில் ஒரு நபரும் நின்றிருந் தனர். இதன்போது அங்கு யாழ்.பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சிறிகயனும் அங்கு வந்திருந்தார். இதே நேரம் அங்கு சிவில் உடையில் நின்றிருந்தவரை எனக்கு முதலில் யார் என்று தெரியாவிட்டாலும் அவர் ஒரு பல்கலைக்கழக பீடாதிபதி தமிழ்மாறன் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன்.

இதன்போது புங்குடுதீவில் கைது செய்யப்பட்டு யாழிற்கு கொண்டு வரப்பட்டிருக்கி ன்றவர்கள் குறித்து மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்னிடம் கேட்டிருந்தார். அத்தோடு மகாலிங்கம் சசிக்குமார் என்று கூறப்படும் ஒரு சுவிஸ் குமார் இந்தக் குற்றச் செயல் சம்பவத்துடன் தொடர்புபடுவதாகவும் அவருடைய கடவுச் சீட்டை அதாவது அவருக்கு பயணத் தடையை ஏற்படுத்தி விமான நிலையத்தில் அறிவிக்குமாறும் அறிவுறுத்தல் கட்டளைகளை எனக்கு விடுத்திருந்தார்.

அவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபரே தெரிவித்த அறிவுறுத்தல் கட்டளையை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்தி அதன் பின்னர் விமான நிலைய பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி அறிவுறுத்தல்களை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எனக்கு வழங்கும் வரையில் சுவிஸ் குமார் குறித்தான எந்தவித தகவல்களும் எனக்கு கிடைக்கப் பெறவில்லை.

இதே வேளை மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கிய அறிவுறுத்தலை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தகவல் வழங்கும் புத்தகத்திலும் பதிந்துள்ளதாகவும் அதன் பின்னரே அவரின் கட்டளைக் கமைய செயற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறு பல நடவடிக்கைகளின் பின்னதாகவே சுவிஸ் குமார் என்பவர் 18ஆம் திகதி யாழ் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து கொண்டேன். இவ்வாறான நிலையில் அடுத்த நாள் சுவிஸ் குமார் என்பவர் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்தது. அவ்வாறு கைது செய்யப்பட்ட சுவிஸ் குமார் இந்திக்க பண்டார என்ற பொலிஸ் அதிகாரியினாலேயே இச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன் பின்னர் சுவிஸ்குமாரும் இச் சம்பவத்துடன் தொடர்புடையவராக அடையாளம் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (மு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த
சாளின் அவர்களின் அன்புத் தந்தையார்

## கந்தையா உதயராசா

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வலம்புரிக் குடும்பம்


## அதிகரிக்கும் சிறுவர்...

அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பிலேயே அதிகளவிலான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் கடந்த ஐந்து மாதங்களில் 47 சிறுவர் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் பல்வேறு குற்றங்கள் பதியப்பட்டு வரும் நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இவற்றில் அதிகமாக இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஆண்டில் இதுவரையிலான காலப் பகுதி வரையில் 3 ஆயிரத்து 785 சிறுவர் துஷ்பிரயோக குற்றங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 956 முறைப்பாடுகள் சிறுவர்கள் மீதான வன்மையான தாக்குதல்களாகவும், 602 முறைப்பாடுகள் குழந்தைகளின் கல்வி உரிமை பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், 426 முறைப்பாடுகள் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும், 117 முறைப்பாடுகள் குழந்தைகளை மிகவும் மோசமான வகையில் பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்படுத்தியமை தொடர்பிலும் 102 முறைப்பாடுகள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியமை குறித்தும் பதியப்பட்டுள்ளன.

அதே போல் கடந்த ஐந்து மாதங்களில் 47 சிறுவர் கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இலங்கையில் அதிகளவிலான குற்றங்கள் பதியப்பட்டுள்ள மாவட்டமாக கொழும்பு மாவட்டம் பதிவாகியுள்ளது.

சிறுவர் கடத்தல் சம்பவங்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகள், பாலியல் தொல்லைகள் குறித்து முறைப்பாடு செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை 1929 என்ற அவசர இலக்கத்தை வழங்கியுள்ளது.

இந்த இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்தி குறித்த முறைப்பாடுகளை உடனடியாக தெரியப்படுத்த முடியும். மேலும் இது 24 மணிநேர சேவையாக செயற்படுவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (மு-11)

## ரெலோவின் தெரிவு...

ள்ளார்.

முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நிகழ்ந்த எமது கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் வட மாகாண சபையின் அமைச்சரவை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள முடிவினை தங்களுக்கு அறிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

தங்கள் தலைமையிலான அமைச்சரவையில், எமது கட்சியின் சார்பில் நியமிக்கப்பட்டிருந்த பா.டெனீஸ்வரன், அவரது பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டியுள்ளதால், காலியாகும் அந்தப்பதவிக்கு எமது கட்சியின் சார்பில் விந்தன் கனகரட்ணம் நியமிக்கப்பட வேண்டும் என எமது அரசியல் குழுவின் குறித்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, ஏற்கெனவே இவ்விடயம் தொடர்பில் எமது கட்சியின் சார்பில் 13.07.2017 ஆம் திகதி நான் அனுப்பியிருந்த கடிதத்திற்கான, அதே திகதியிடப்பட்ட உங்கள் பதில் கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டிருந்தவாறு பா.டெனீஸ்வரன் தொடர்பில் உரிய நடவடிக்கையை எடுத்து அவருக்குப் பதிலாக விந்தன் கனகரட்ணத்தை அமைச்சரவைக்கு நியமனம் செய்யுமாறு நான் தங்களை வேண்டிக்கொள்கின்றேன் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சராக ரெலோ அமைப்பில் போட்டியிட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி பா.டெனீஸ்வரன் அமைச்சராக செயற்பட்டு, தற்போது கட்சியின் நடவடிக்கைகளுக்கு அமைவாக அவரது அமைச்சுப்பொறுப்பு மீளபெற்றுக்கொள்ளப்பட்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் உள்ள போதும் அவரிடம் எவ்வித முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் ரெலோ இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-4)


### CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(சு-9092)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

### VACANCY

இலங்கையில் முன்னணி வகிக்கும் No:01 நிறுவனமான G.M. International (Pvt) இற்கு துடிப்பும் கடினமாக உழைக்கக்கூடிய ஆண்,பெண் இருபாலாருக்கும் குறுகிய காலத்தில் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நினைப்பவர்களுக்கு மேலதிக கல்வியை தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு.

- வயதெல்லை 18-30
- தகைமை-O/L or A/L
- அனுபவம் அவசியமற்றது.

- நிர்வாக அதிகாரி
- உதவி முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- காசாளர்

பயிற்சியின்போது 11500/=- 15000/= வரை
பின்னர் 50,000+ EPF, ETF

தொடர்புகளுக்கு: 077 999 4807 (9830)

### உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் முன்னணி நிறுவனமான US International Company தனது புதிய கிளையை திறக்கவுள்ளதால் அதற்கான பதவி வெற்றிடங்களுக்காக பின்வரும் இடங்களில் இருந்து கோரப்படுகின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி

**வரவேற்பாளர் - Trainee, விநியோகஸ்தர் - Trainee, முகாமையாளர்- Trainee, கிளை முகாமையாளர்- Trainee** இவற்றுக்கு

- முன்அனுபவம் அவசியமற்றது.
- வயதெல்லை 18 - 30.
- O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- 03 தொடக்கம் 06 மாதகால பயிற்சி நெறி.
- பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 12000/-
- பயிற்சியின் பின் நிரந்தர வருமானம் 65000 +
- மருத்துவ காப்பீடு, ETF, EPF உட்பட
- வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை.
- தங்குமிட வசதி இலவசம்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா இவ் இடங்களில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

(9844)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு: 0777009820, யாழ்ப்பாணம்: 0765727243, மன்னார்: 0770095294**

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கைதடி கோப்பாய் சந்தியில் இருந்து 150 m தூர A9 வீதியில் வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. (பொன்னம்பலம் காஸ் ஸ்டேசனுக்கு அருகாமையில்) (நிறுவனங்கள், ஹொட்டல்கள் அமைப்பதற்கு உகந்த இடம்.

தொடர்பு: 071 476 5998

(9836)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



(9842)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

### A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2017 மாணவர்களுக்கான
விசேட செயலமர்வு

| | |
|---|---|
| E-Tec | **பானுயன்** (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)<br>**சேரலாதன்** (யாழ்.பல்கலைக்கழகம்) |
| SFT | **ராகவன்** (மானிப்பாய் இந்துக் கல்லூரி)<br>**மதுசுதன்** (யாழ்.பல்கலைக்கழகம்) |
| Bio Tec | **திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)<br>**சசிகரன்** (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) |
| ICT | **லவன்** (யாழ்.பல்கலைக்கழகம்) |
| விவசாயம் | **சாரங்கன்** (கிளி.மத்திய கல்லூரி) |

22, 23-ம் திகதி சனி, ஞாயிறு
நேரம்: 9.00 - 2.00
இடம் : குளப்பிட்டிச் சந்தி (100m), உயர் கலைக் கல்லூரி
தொடர்பு : 077 017 5346

அனுமதி இலவசம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

(C-9105)

குறிப்பு : முன்பதிவு மேற்கொள்ளவும்

### முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான

விசேட கருத்தரங்கு

வியாழன், வெள்ளி 9.30 - 3.30 மணிவரை

இரு நாட்களுக்கான கட்டணம்

500/=

DMI

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 076 688 3394

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-9054)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

### இறுதிக் கருத்தரங்குகள்

- July 22, 23ம் திகதிகளில் நடைபெறவுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் (MA) போட்டிப் பரீட்சை கருத்தரங்கு 20.07. 2017 (வியாழன்), 21.07.2017 (வெள்ளி) காலை 9.00 - 4.00 மணிவரை.
- July 29ம் திகதி நடைபெறவுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் (DO) போட்டிப் பரீட்சை கருத்தரங்கு. 22.07.2017 (சனி), 23.07.2017 (ஞாயிறு) காலை 9.00 - 4.00 மணிவரை

வழமையான ஆசிரியர் குழாம்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
தொ.பே: 077 469 6695

(C-9104)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org